# STUDY MATERIAL FOR B.Com. & B.Sc.

# PART – I TAMIL

# SEMESTER – II

## ACADEMIC YEAR 2025-26

## PREPARED BY

## TAMIL DEPARTMENT

KAMARAJ COLLEGE

# அலகு - 1
# தமிழ் இலக்கிய வரலாறு

**1. சிற்றிலக்கியம்**

1. சிற்றிலக்கியம் அளவில் (பாடல் எண்ணிக்கை அல்லது அடிகளின் எண்ணிக்கை) சுருங்கியதாக அமைவது.

2. அகப்பொருள், அல்லது புறப்பொருளில் ஏதேனும் ஒரு துறையைப் பற்றியதாக அமையும். (கோவை போன்ற சில சிற்றிலக்கியங்கள் பல துறைகளைக் கொண்டு அமைவதும் உண்டு.)

3. பாடப்பெறும் கடவுள் அல்லது மன்னன் அல்லது வள்ளல் ஆகியோருடைய வாழ்வின் ஒரு சிறு கூறு மட்டுமே விளக்கப்பட்டிருக்கும். எடுத்துக்காட்டாக: உலா இலக்கியம் தலைவன் உலாவரும் காட்சியை மட்டுமே சிறப்பித்துப் பாடப்படுவது.

4. அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு உறுதிப் பொருள்களுள் ஏதேனும் ஒன்றைத் தருவதாக அமைவது சிற்றிலக்கியம்.

இவ்வகையில் பள்ளு, தூது, உலா, பிள்ளைத்தமிழ், கலம்பகம், கோவை, குறவஞ்சி போன்ற பலவகை இலக்கியங்கள் சிற்றிலக்கியம் என்ற வகைமையுள் அடங்கும்.[1] சிற்றிலக்கியங்கள் வடமொழிபயில் பிரபந்தங்கள் எனப்படுகின்றன. பிரபந்தம் என்பது இலக்கிய வகைகள் பலவற்றைக் குறிக்கும் ஒரு பொதுப்பெயர் ஆகும். சமக்கிருதத்தில் பிரபந்தம் என்னும் சொல், "கட்டப்பட்டது" எனப் பொருள்படும்.

**சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கை**

சிற்றிலக்கியவகைகளின் எண்ணிக்கை தொண்ணூற்றாறு என மரபாக கூறப்படுகிறது. இந்த தொண்ணூற்றாறு வகைகளையும் தாண்டி பலவகை சிற்றிலக்கியங்கள் வளர்ந்தும் விரிந்தும் தொண்ணூற்றாறு என்ற எண்ணிக்கைக் கடந்து பிற்காலத்தில் கூடிவிட்டது. இதன் எண்ணிக்கைக் குறித்து அறிஞர்களிடையே எண்ணிக்கை மாறுபாடு உள்ளது. இந்த எண்ணிக்கையானது குறைந்தபட்சம் 186 என்றும், 417 என அதிகப்பட்சமாகவும் கூறப்படுகிறது.

KAMARAJ WOMENS COLLEGE

**குறவஞ்சி**

குறவஞ்சி ஒரு தமிழ் பாடல் நாடக இலக்கிய வடிவமாகும். இது சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றாகும்.பாட்டுடைத் தலைவன் உலாPவரக் கண்ட தலைவி ஒருத்தி, அத்தலைவன் மீது காதல் கொண்டு அவனை அடையத் தவிக்கும் நிலையில், குறவர் குலத்தைச் சார்ந்த பெண் ஒருத்தி அத்தலைவிக்குக் குறி கூறிப் பரிசில் பெறும் செய்திகளைக் கூறுதலால் குறவஞ்சி என்னும் பெயர் பெற்றது. குறவஞ்சி இலக்கியம் பின்னாளில் குறத்திப்பாட்டு என்றும் வழங்கலாயிற்று.

- "கட்டினும் கழங்கினும்" என்ற தொல்காப்பிய நூற்பாவின் அடிப்படையில் தோன்றியது.

**குறவஞ்சி இலக்கியம்**

- குறவஞ்சி என்பது தொல்காப்பியர் கூறும் "வனப்பு" என்ற நூல் வகையுள் அடங்கும்.
- குறம், குறத்திப்பாட்டு என்னும் வேறு பெயர்களும் உண்டு.
- குறவஞ்சி நாட்டியம், குறவஞ்சி நாடகம் என்ற பெயர்களும் உண்டு.
- 96 வகை சிற்றிலக்கியங்களில் ஒன்று.
- குறிஞ்சி நிலத்தை அடிப்படையாகக் கொண்டது.
- குறி சொல்லும் மகளிரை ஔவையார் தன் குறுந்தொகைப் பாட்டில் "அகவன் மகள்" என அழைக்கிறார்.
- குறவஞ்சி அக இலக்கிய நூலாக இருப்பினும் தலைவன், தலைவி பெயர் கூறப்படும்.
- இயற்றமிழ், இசைத்தமிழ் இரண்டும் கலந்த இலக்கியம் குறவஞ்சி
- குறவஞ்சி பல வகைப் பாக்கள் கலந்து வரப் பாடப்படும்.
- குறவஞ்சி இலக்கியத்திற்கு முன்னோடி அடிப்படை நூல் = குமரகுருபரரின் மீனாட்சிக் குறம் முதல் குறவஞ்சி நூல் = குற்றால குறவஞ்சி
- பன்னிரு பாட்டியல் குறவஞ்சியை,

  "இறப்பு நிகழ்வெதிர் வெண்ணுமுக் காலமும்
  திறப்பட உரைப்பது குறத்திப் பா"

KAMARAJ WOMENS COLLEGE

**பிற குறவஞ்சி நூல்கள்**

1. திருக்குற்றால குறவஞ்சி (முதல் குறவஞ்சி) - திருகூடராசப்ப கவிராயர்
2. சரபேந்திர பூபாலக் குறவஞ்சி – கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர்
3. தமிழரசி குறவஞ்சி - வரத நஞ்சையப்ப பிள்ளை
4. பெத்தலேகம் குறவஞ்சி - வேதநாயக சாஸ்திரி

**கலம்பகம்**

கலம்பகம் என்ற சொல் இரண்டு சொற்களின் கூட்டு ஆகும். கலம்பு + அகம் = கலம்பகம் என்றும், கலம் + பகம் = கலம்பகம் என்றும் இந்தச் சொல்லைப் பிரிக்கலாம். பல்வேறு வகையான உறுப்புகள் இந்த இலக்கிய வகையில் அகத்தே - உள்ளே - கலந்து வருவதால் கலம்பகம் என்று அழைக்கப்படுகின்றது. கலம் என்றால் 12 என்று பொருள்.

கலம்பகம் என்ற சொல் இரண்டு சொற்களின் கூட்டு ஆகும். கலம்பு + அகம் = கலம்பகம் என்றும், கலம் + பகம் = கலம்பகம் என்றும் இந்தச் சொல்லைப் பிரிக்கலாம். பல்வேறு வகையான உறுப்புகள் இந்த இலக்கிய வகையில் அகத்தே - உள்ளே - கலந்து வருவதால் கலம்பகம் என்று அழைக்கப்படுகின்றது. கலம் என்றால் 12 என்று பொருள். பகம் என்றால் பகுதி அல்லது பாதி என்று பொருள். இங்கும் பன்னிரண்டின் பகுதி ஆறு ஆகும். எனவே, 12 + 6 = 18. இந்த இலக்கிய வகையில் 18 உறுப்புகள் கலந்து வருவதால் கலம்பகம் என்று பெயர் பெறுகின்றது எனலாம். பலவகைப் பாடல்கள் ஒருங்கிணைந்து உருவாவதால் இந்தச் சிற்றிலக்கிய வகைக்கு இப் பெயர் ஏற்பட்டது. புயவகுப்பு, மதங்கம், அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்னும் பதினெட்டுப் பொருட்கூற்று உறுப்புக்களும் இயைய, மடக்கு, மருட்பா, ஆசிரியப்பா,

கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரிய விருத்தம், கலி விருத்தம், கலித்தாழிசை, வஞ்சி விருத்தம், வஞ்சித்துறை, வெண்துறை என்னும் இவற்றால், இடையே வெண்பா கலித்துறை விரவ அந்தாதித் தொடையால் பாடுவது கலம்பகம்.

KAMARAJ WOMENS COLLEGE

**பிற கலம்பக நூல்கள்**

1. நந்திக் கலம்பகம்
2. மதுரைக் கலம்பகம்
3. காசிக் கலம்பகம்
4. புள்ளிருக்குவேளூர்க் கலம்பகம்

**உலா**

உலா என்பது பிரபந்தம் எனப்படும் தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகும். யானை, குதிரை, தேர் போன்றவற்றில் ஏறி, இசைக் கருவிகளை இசைப்போர் முன்னே வர, மக்கள் புடைசூழ நகர வீதிகளில் வருவது உலா என்னும் சொல்லால் குறிக்கப்படும். இறைவனோ அரசனோ இவ்வாறு உலா வருதலையும், அவ்வாறு உலா வருபவரைக் கண்டு மகளிர் காதல் கொள்வதையும் கருப்பொருளாகக் கொண்டு பாடப்படுவதே உலா இலக்கியம் ஆகும்.

**உலாவின் பகுதிகள்**

**முன்னெழுநிலை**

உலாவின் தொடக்கத்தில் பாட்டுடைத் தலைவனின் சிறப்பு, நீராடல், ஒப்பனை செய்தல், பரிவாரங்கள் புடைசூழ ஊர்தியில் ஏறி வீதிக்கு வருதல் என்னும் இவற்றைக் கூறும் பகுதி முன்னிலை எனப்படும்.

**பின்னெழுநிலை**

இதன்பின் ஏழு பருவ மகளிரும் குழுமி நின்றும் தனித்தனியாக நின்றும் கூறுவன பின்னெழுநிலை எனப்படும்.

**பிற உலா நூல்கள்**

திருக்குற்றால நாதர் உலா - திரிக்கூடராசப்பக் கவிராயர்
திருக்கயிலாய ஞான உலா - சேரமான் பெருமாள் நாயனார், கிபி 9ம் நூற்றாண்டு, இதுவே முதலாவது உலா இலக்கியம் எனக் கூறப்படுகிறது.

**பரணி**

பரணி என்பது தமிழில் வழங்கப்பெறும் தொண்ணூற்றாறு பிரபந்த வகைகளுள் ஒன்றாகும். போரிலே ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றிபெறும் வீரர்கள் மேல் பாடப்படுவது பரணி இலக்கியம் ஆகும்.இதை,

KAMARAJ WOMENS COLLEGE

ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி எனப் இலக்கண விளக்க பட்டியல் விளக்குகிறது.பெரும்போர் புரிந்து வெற்றி பெற்ற வீரனைச் சிறப்பித்துப் பாடுவதையும் பரணி என்று வழங்குவதுண்டு. போரிற் தோற்ற அரசன் நாட்டில் போர்க்களம் அமைத்துப் போர் செய்து, வெற்றி பெறுவதால் தோற்ற நாட்டுப் பெயரால் நூலை வழங்குவது மரபு.

பரணி என்னும் சொல்லானது, காடுகிழவோன், பூதம், அடுப்பு, தாழி, பெருஞ்சோறு, தருமன் நாள், போதம் என்னும் பல பொருள்களைத் தரும். இதனைக்

"காடு கிழவோன் பூதமடுப்பே, தாழி பெருஞ்சோறு
தருமனாள் போதமெனப் பாகு பட்டது பரணி நாட்பெயரே" - திவாகரம்

என்பதால் அறியலாம்.

**பிற பரணி நூல்கள்**

1. கலிங்கத்துப்பரணி - செயங்கொண்டார்
2. தக்கயாகப் பரணி - ஒட்டக்கூத்தர்.

**பள்ளு**

இனம் சார்ந்த பண்பாடுகளை அறிவதற்கு ஆதாரமாக விளங்குகிற இலக்கியங்களில் இதுவும் ஒன்று. பன்னிரு பாட்டியல் 10 செய்யுள்களில் பாடப்படுகிற உழத்திப்பாட்டு என்னும் சிற்றிலக்கிய வகையை குறிப்பிடுகிறது. இதன் வளர்ச்சியாக பள்ளு இலக்கியத்தைக் கொள்ளலாம். பள்ளுஇலக்கியம் புலன் வகைகளில் ஒன்றாகும். மருத நிலத்தில் உழவுத் தொழில் சார்ந்த பள்ளரின மக்களின் வாழ்க்கையை இந்த இலக்கியத்தில் அறிய முடிகிறது. உழவுத் தொழிலின் பல்வேறு நிலைகள், ஏர்க்கால் வகை, நெல் வகை, மாடுகளின் வகை போன்றவை இதில் விவரிக்கப்படுகின்றன. மழை வருவதற்கான அறிகுறிகள், மழை பொழிந்து வெள்ளம் பல்வேறு நிலங்களில் பாய்தல், ஆகிய பற்றிய செய்திகளையும் இவ்விலக்கியத்தில் காண முடியும். பள்ளு இலக்கியம் இனிய இசையும், உரையாடல்களும் கலந்து காணப்படுவதால் சிறந்த நாடகமாக விளங்குகிறது. இலக்கிய நயம் மிக்கது.

**முக்கூடற் பள்ளு**

ஒரு பள்ளனுடைய இரண்டு மனைவியரில் ஒருத்தி சைவ சமயத்தவள், மற்றவள் வைணவ சமயத்தைச் சேர்ந்தவள். இவ்விருவருக்கும் ஏற்படுகின்ற

KAMARAJ WOMENS COLLEGE

சண்டையில் சிவனதும், திருமாலினதும் தலைகள் உருளுவதை முக்கூடற் பள்ளு ஆசிரியர் நகைச்சுவையுடன் எடுத்துக்கூறுகிறார்.

சுற்றிக்கட்ட ஒரு முழத்துண்டு மில்லாமல் புலித்
தோலை உடுத்தானுங்கள் சோதி அல்லோடி.

என்று இளைய மனைவியின் இறைவனாகிய சிவனை, உடுத்துவதற்கு ஒரு முழத்துண்டு கூட இல்லாமல் புலித்தோலை உடுத்திருக்கிறான் என்று ஏசுகிறாள். அதற்கு இளையவள் திருமால் மரவுரியும் சேலையும் கட்டிக்கொண்டது பற்றி இவ்வாறு சுட்டிக்காட்டுகிறாள்.

கற்றைச் சடைகட்டி மரவுரியும் சேலைதான் பண்டு
கட்டிக்கொண்டான் உங்கள் சங்குக் கையன் அல்லோடி

சிவன் நஞ்சுண்ட கதையைத் திரித்துப் பதிலடி கொடுக்கிறாள் மூத்தவள்.

நாட்டுக்குள் இரந்தும் பசிக்காற்ற மாட்டாமல் வாரி
நஞ்சையுண்டான் உங்கள் நாதனல்லோடி

இளையவளிடமிருந்து பதில் வருகிறது இவ்வாறு:

மாட்டுப் பிறகே திரிந்தும் சோற்றுக்கில்லாமல் வெறும்
மண்ணையுண்டான் உங்கள் முகில் வண்ணனல்லோடி

எடுத்துக்கூறுகிறார்.

**பிள்ளைத்தமிழ்**

பிள்ளைத்தமிழ் என்பது தமிழ் இலக்கியத்தில் வழங்கும் பிரபந்த நூல் வகைகளுள் ஒன்று. புலவர்கள் தாம் விரும்பிய தெய்வங்கள், சமயாசாரியர்கள், புலவர் பெருமக்கள், ஆதீனகர்த்தர், அரசர், உபகாரிகள், அவர் அவர்கட்கு உகந்தவர்கள், ஆகியோரைக் குழந்தையாக உருவகித்துக் கற்பனை பல அமையப் பாடப்படுவது பிள்ளைத்தமிழாகும். குழந்தையாகக் கொண்டது பாவனையே ஆகும். அப்பாட்டுடைத் தலைவர்கள் செயற்கரும் செயல்களைக் குறித்துப் பிள்ளைக்கவியில் பாடவில்லையாயின், நூல் என்னும் அமைப்புக்குள் அமையாமல், வெறும் பருவங்கள் மட்டும் அமைந்திருக்கும். ஆகவே, இதனை உளம் கொள்ளுதல் வேண்டும்.

KAMARAJ WOMENS COLLEGE

இஃது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இரண்டு பால்களிலும் பாடப்படுவதுண்டு. மூன்று மாதம் முதல் இருபத்தொரு மாதம் வரையான குழந்தையின் வாழ்க்கைக் காலத்தைப் பத்துப் பருவங்களாகப் பிரித்துக் காண்பர். ஒவ்வொரு பருவத்துக்கும் பத்துப் பாடல்கள் வீதம் அமைத்துப் பாடப்படுவது வழக்கு. ஆண்பால் பிள்ளைத் தமிழ்க்குரிய பருவங்கள் இவை, பெண்பால் பிள்ளைத் தமிழ்க்குரிய பருவங்கள் இவை என்பனவும் முன்பே குறிக்கப்பட்டன.

**தொல்காப்பியம்**

கடவுள் மீது காமம் கொண்டு பாடுவதும் கைக்கிளை. கைக்கிளையின் புறம் பாடாண் திணை ஆகையால் கடவுள்மீது காமம் கொண்டு பாடுவதும் பாடாண் திணை. இதில் கடவுளைக் குழந்தை வடிவமாக்கிப் பாடும் மரபும் உண்டு எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

**பிள்ளைத்தமிழ் முன்னோடி**

தொல்காப்பியத்துக்கு 1200 ஆண்டுகளுக்குப் பின்னர்த் தோன்றிய நூலாயினும் திருமாலைக் குழந்தையாக்கிக்கொண்டு பெரியாழ்வார் பாடும் பாடல்கள் இதற்கு இலக்கியமாகத் திகழ்கின்றன. பெரியாழ்வார் பாடிய இந்தப் பிள்ளைத்தமிழ் பிற்காலப் பிள்ளைத்தமிழ் நூல்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது.[2]

பருவங்கள் ஆண்பாற் பிள்ளைத்தமிழ் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் எனும் பத்துப் பருவங்களையுடையது. பெண்பாற் பிள்ளைத்தமிழில் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, ஆகியவற்றைப் பொதுவாகக் கொண்டு இறுதியிலுள்ள மூன்று பருவங்களுக்கு ஈடாகச் சிற்றில் இழைத்தல், சிறு சோறாக்கல், குழமகன், ஊசல், காமவேள்நோன்பு முதலியவற்றுள் எவையேனும் மூன்றைப் பெற்று வரும் ஆயினும் பெரும்பாலும் நீராடல் அல்லது கழங்கு, அம்மானை, ஊசல் எனும் பருவங்களே அதிகம் இடம் பெறுகின்றன. இதனை

" சாற்றிய காப்புத்தால் செங்கீரை சப்பாணி
மாற்றாரிய முத்தமே வாரானை - போற்றாரிய
அம்புலியே யாய்த்த சிறுபறையே சிற்றிலே



KAMARAJ WOMENS COLLEGE

பம்புசிறு தேரோடும் பத்து "

என்ற வெண்பாப்பாட்டியல் நூற்பா குறிப்பிடுகிறது.

**சில பிள்ளைத்தமிழ் நூல்கள்**

1. மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் - குமரகுருபரர்
2. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் – குமரகுருபரர்
3. திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் – பகழிக்கூத்தர்
4. சேக்கிழார் பிள்ளைத்தமிழ் - மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார்.

**தூது**

தூது என்பது ஒருவர் தம் கருத்தை இன்னொருவருக்குப் புலப்படுத்த இடையே பிறிதொருவரை அனுப்புவதாகும். அரசர்கள் பகைவர்களிடத்தும், புலவர்கள் வள்ளல்களிடத்தும், தலைவர் தலைவியரிடத்தும், தலைவியர் தலைவரிடத்தும் தூது அனுப்பியுள்ளனர். இதற்கான சான்றுகள் தொல்காப்பியத்தின் மூலமும், சங்க இலக்கியத்தின் மூலமும் அறியலாம்.

தமிழரிடத்திற் தூதுவிடும் மரபு தனிப் பாடல்களிலும், பத்தி இலக்கியங்களிலும், காப்பியங்களிலும் இடம்பெற்று கி.பி. 14ஆம் நூற்றாண்டளவில் தனியொரு சிற்றிலக்கியமாக உருப்பெற்றது. இந்தவகையில் எழுந்த முதற் சிற்றிலக்கியமாக கி.பி. 14ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த உமாபதி சிவாச்சாரியாரின் நெஞ்சுவிடு தூதினைக் குறிப்பிடுவர்.

**தூதின் இலக்கணம்**

ஒருவர், தம்முடைய கருத்தைக் காதலர், நண்பர். பகைவர் ஆகியோரில் யாரேனும் ஒருவர்க்கு மற்றொருவர் வாயிலாகக் கூறி விடுப்பதே தூதாகும். மக்களில் ஒருவரையோ, அன்றி விலங்கு, பறவை முதலான அஃறிணைப் பொருள்களில் ஒன்றனையோ தூது விடுப்பதாகக் கலிவெண்பாவான் யாக்கப்பெறும் இயல்பினதே இந்நூலாகும். தெய்வப் புலவராகிய திருவள்ளுவர் தம் நூலில் தூது என்னும் அதிகாரத்தில் தூதிலக்கணத்தைத் திறம்பட வகுத்தோதியுள்ளார்.

KAMARAJ WOMENS COLLEGE

**அஃறிணைத்தூதுப் பொருட்கள்**

ஒருவர் உரைக்கும் கருத்தை அறிந்து மற்றொருவர்க்கு உணர்த்தும் ஆற்றல் வாய்ந்த மக்களையே தூதாக விடுத்தல் இயல்பாயினும் அத்தகைய ஆற்றலில்லாத அஃறிணைப் பொருள்களையும் தூது விடுக்கும் முறை, இலக்கிய வழக்கில் காணப்படுகின்றது. இவ்வழக்குப் பற்றியே,

"கேட்குந போலவும் கிளக்குந போலவும்
இயங்குந போலவும் இயற்றுந போலவும்
அஃறிணை மருங்கினும் அறையப் படுமே"

என்று பின்னாளில் நன்னூலார் இலக்கணம் வகுக்க வேண்டியதாயிற்று.

**தூது நூல்கள்**

1. நெஞ்சுவிடு தூது,
2. தமிழ்விடு தூது,
3. நெல்விடு தூது,
4. துகில்விடு தூது,

**அந்தாதி**

ஒரு பாடல் முடிவில்உள்ள எழுத்து, அசை, சீர், சொல் அல்லது அடி அடுத்து வரும்பாடலின் தொடக்கமாக] அமையும் பாடல்களால் ஆன செய்யுள்/பிரபந்தம்அடுத்தடுத்து வரும் அடிகள் அந்தாதியாக அமையும் அந்தாதித் தொடை முதலும் முடிவும்தலை முதல் பாதம் வரையுள்ள உறுப்பு

**வரலாறு**

சங்க இலக்கியங்களில் ஒன்றான பதிற்றுப்பத்தின் நான்காம் பத்தில் அந்தாதி அமைப்பு உண்டு. எனினும் அந்தாதி இலக்கியமாகத் தனியே அமைந்தவற்றில் இன்று கிடைக்கும் பழைய நூல் காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதி ஆகும். தவிர பன்னிரு திருமுறைகளில் பதினோராம் திருமுறையில் உள்ள நூல்களில் எட்டு அந்தாதி வடிவில் அமைந்துள்ளன. மாணிக்கவாசகரின் திருவாசகம், திருமூலரின் திருமந்திரம், நம்மாழ்வாரின்

KAMARAJ WOMENS COLLEGE

திருவாய்மொழி ஆகியவற்றிலும் அந்தாதி வடிவில் அமைந்த பாடல்களைக் காண முடியும். இவை தவிர பிரபந்தவகையைச்சேர்ந்த நான்மணிமாலை, இரட்டைமணிமாலை, அட்டமங்கலம், நவமணிமாலை, ஒருபா ஒருபது, இருபா இருபது, மும்மணிக்கோவை, மும்மணிமாலை, கலம்பகம் என்பவை அந்தாதியாக அமைகின்றன.

### அந்தாதி நூல்கள்

1. அபிராமியந்தாதி - அபிராமி பட்டர்
2. திருவரங்கத்தந்தாதி - பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்
3. திருவேங்கடத்தந்தாதி - பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்
4. திருவந்தாதி - பொய்கையாழ்வார்.

### 2. தனிப்பாடல் அறிமுகம்

தனித்தனி புலவர்களால் அவ்வப்போது தொடர்பில்லாத வெவ் வேறு பாடுபொருள்களைக் கொண்டு இயற்றப்பட்ட பாடல்கள் தனி பாடல்கள் என்று அழைக்கப்படும். புலவர்கள் தம் உள்ளக் கருத்தை எவ்வித கட்டுப்பாட்டிற்கும் உட்படாமல் விருப்பம் போல எழுதிய பாடல்கள் தனிப்பாடல்கள் ஆகும். இவற்றை தமிழறிஞர்களும், சுவிஞர்களும் பெரிதும் முயன்று தேடி தனிப்பாடல்கள் என்ற தொகுப்பில் தொகுத்து இருக்கிறார்கள். இப்பாடலில் பலவித உணர்ச்சிகள், ஓசை விளையாட்டு, சொல் விளையாட்டு, விடுகதை என அனைத்து சுவைகளும் நயங்களும் காணக் கிடைக்கின்றன. சங்க காலத்தில் அவ்வப்போது ஆங்காங்கே புலவர்கள் பாடிய பாடல்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் என்ற நூல்களில் திரட்டப்பட்டுள்ளன. தனிப்பாடல்கள் பாடிய புலவர்கள் எண்ணற்றவர்கள். அவற்றில் அழகிய சொக்கநாதர், அதிவீரராம பாண்டியர், சுந்தர கவிராயர், பட்டினத்தார், அவ்வையார், படிக்காசு புலவர், பிள்ளை பெருமாள் ஐயங்கார், அருணாச்சல கவிராயர், ராமலிங்க அடிகளார் வேதாந்த தேசிகர் என பல புலவர்கள் பல தனிப் பாடல்களை பாடி பெருமை சேர்த்துள்ளனர், இவ்வாறு பல புலவர்கள் தனிப்பாடல்கள் பாடியதன் மூலம் பற்பல செய்திகளை நாம் தெரிந்து கொள்ள முடிகிறது.

KAMARAJ WOMENS COLLEGE

## 3. இக்காலஇலக்கியம்

### கவிதை

இருபதாம் நூற்றாண்டுகளில் கவித்திறம் மிக்க படைப்பாளர்களால் படைக்கப்பட்டு உயிர் பெற்றவை மரபுக் கவிதை, புதுக்கவிதை ஆகும்.

### மரபுக் கவிதை

மரபு நிலம் அல்லாது புதுமைகளைப் பரப்ப இயலாது நிகழ்காலத்தை செழுமைப்படுத்தும் இறந்த காலத்தின் உயிர் மூலம் மரபு என்று ஆங்கில கவிஞர் எலியட் சொன்னதை அப்துல் ரகுமான் வலியுறுத்துகிறார்.

### புதுக்கவிதை

எதுகை, மோனை, தனிச்சொல் என்னும் மரபுகள் இன்றி சீர், தளை கட்டுப்பாடு இன்றி கருத்துகளை வெளிப்படுத்துவது புதுக்கவிதை ஆகும். புதுக்கவிதையின் காலத்தை வானம்பாடி காலம், மணிக்கொடி காலம் என்று பிரிப்பர். மேலைநாட்டார் தொடர்பாலும் இயற்றமிழ், இசைத்தமிழுக்கு அடிமையாகி விட்டமையாலும் கவிதை உலகில் செரிமானதும் போலித்தன்மை குறைந்ததுமான புதுக்கவிதை தமிழில் தோற்றம் பெற்றது.

### ஹைக்கூ கவிதைகள்

ஹைக்கூ வடிவம் ஜப்பான் மொழியின் மூலம் தமிழுக்கு கிடைத்தது. ஹைக்கூ என்பதற்கு கிளிஞ்சல் என்று பொருள். ஒவ்வொரு கிளிஞ்சலிலும் கடலும் ஒளிந்து இருக்கிறது. கடல் பற்றிய எண்ணங்கள், கடலின் அனுபவங்கள் கிளிஞ்சல்களின் உடலில் ஒட்டிக் கொண்டிருக்கின்றன. ஹைக்கூ கவிதைகள் பத்து அல்லது 11 சொற்களுக்குள் எழுதப்படுகின்றன. இளம் கவிஞர்களுக்கு இவை சிறந்த வரமாக விளங்குகின்றன. தலைப்பு கொண்டு பொருள் உணரப்படுமாறு கவிதைகள் உள்ளன.

### நாடகம்

நாடகம் என்னும் சொல் நாடு + அகம் என பிரிக்கப்பட்டால் உள்ளத்தால் உணர்த்துதல் எனப் பொருள்படும். இசையால் காதுக்கும், கூத்தால் கண்ணுக்கும்

KAMARAJ WOMENS COLLEGE

இன்பம் பயக்கும் நாடகக்கலை இக்கலையினைஅரசு நாகரிகத்திற்கு கண்ணாடி, பாமர மக்களின் பல்கலைக்கழகம் என்கிறார் கலைஞர் டி கே சண்முகம். இது கலைகளின் அரசி எனப் போற்றப்படுகிறது. தொடக்கத்தில் நாட்டியமும், நாடகமும் ஒன்றாகவே எண்ணப்பட்டன. மரப்பாவைக் கூத்து தோன்றி பின்னர் பொம்மலாட்டம், தோற்பாவை கூத்தாகவும் மாறி நிழற்பாவை கூத்தாக சிறந்து பொம்மைக்கு பதிலாக உயிருள்ள மாந்தர் வேடம் புனைந்து ஆடும் நிலை ஏற்பட்டு நாடகக்கலையாக வளர்ந்தது என்பதாகவும் ஆய்வுலகில் கருத்து காணப்படுகிறது. நாடகங்களின் வடிவங்களை குறவஞ்சி நாடகங்கள், நொண்டி நாடகங்கள், பள்ளு நாடகங்கள், இசை நாடகங்கள், செய்யுள் நாடகங்கள், புராண இதிகாச நாடகங்கள் என்றெல்லாம் பிரித்து வைத்திருந்தனர்.

**உரைநடை**

பேச்சு வழக்கில் உள்ள சொற்களைப் புறக்கணித்து இலக்கியத்தில் வழக்கு சொற்களை மிகுதியாக பயன்படுத்தி அவற்றை சரியாக அமைத்து எதுகை, மோனைகளை வைத்து எழுதுவதை பழைய உரைநடை என்பர். உரைநடை என்ற பெயர் பழைய நூல்களின் உரையில் உள்ள நடை என்பதை விளக்கும். இறையனார் களவியல் உரை முதலாக இலக்கணம், இலக்கியம் இருவகையான நூல்களுக்கும் அறிஞர் பலரால் எழுதப்பட்ட ஒரே நூல்கள் பல தோன்றியுள்ளன. உரைநடையில் நூல் இயற்றும் வழக்கம் ஐரோப்பியர் தொடர்பில் ஏற்பட்டதாகும் என்பர் திரு மார்ட் துரை அவர்கள். இக்கூற்று இந்திய மொழிகள் அனைத்திற்கும் பொருந்துவதாயினும் முதன் முதலாக உரைநடை தோன்றிய பெருமை தமிழ் மொழியை சாரும்.

**திராவிட இயக்கம் வளர்த்த தமிழ்**

திராவிட இயக்கம் என்பது கிபி 19ஆம் நூற்றாண்டின் இறுதி மற்றும் 20ஆம் நூற்றாண்டுகளில் தமிழ் சமுதாயத்தில் உருவாகிய ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சமூக மற்றும் அரசியல் இயக்கமாகும். இக்காலகட்டத்தில் சாதாரண மக்களுக்கு கிடைத்த கல்வி வாய்ப்புகள் அவர்களுடைய சமூக உணர்வுகளை தட்டி எழுப்பியிருந்தன. திராவிட மகாஜன சபை என்பது 1991 இல் தொடங்கப்பட்டது. திராவிட கழகத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவராக சி.என்.

KAMARAJ WOMENS COLLEGE

அண்ணாதுரை திகழ்ந்தார். சாதி ஒழிப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு, பிராமண அறிக்கை, எதிர்ப்பு பெண்களின் உரிமைகள் ஆகிய தொடர்பான விஷயங்களில் இவர்கள் தீவிர கவனம் செலுத்தினர். திராவிட முன்னேற்ற கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் என்று பல கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டு சமூக நலனுக்காக அவை பாடுபட்டன.

**சிறுகதை**

சிறுகதை என்பது சுருக்கமான, கதைகூறும்புனைவுவகை உரைநடை இலக்கியமாகும். இது பெரும்பாலும் ஒரு மையக் கருவினை அல்லது நிகழ்ச்சியின் அனுபவத்தை விவரிக்கும் இலக்கிய வகையாகும். சிறுகதை பொதுவாக குறும் புதினம் மற்றும் நாவலை விடச் சுருக்கமானதாகும். பெரும்பாலும் நடப்பியல் நோக்கில் எழுதப்படுவது. உலக இலக்கியத்தில் அமெரிக்க எழுத்தாளர்களான எட்கார் ஆல்லன் போ, ஒ ஹென்றி இருவரையும் சிறுகதையின் தொடக்கப் புள்ளிகளாகச் சொல்வது வழக்கம். ஆனால் சிறந்த வடிவம் கொண்ட சிறுகதைக்கு ஆண்டன் செக்காவ் தான் முன்னோடி என்பார்கள்.

கதை சொல்வதும் கேட்பதும் பன்னெடுங்கரலமாக உள்ளது தான். புராண இதிகாச கதைகளும், நீதிக் கதைகளும் அவ்வாறு வழங்கப்பட்டு வந்ததை அறிவோம். ஆனால் அவை ஒரு வரையறைக்கு உட்படாத நிலையில் இருந்தன. அவற்றிற்கென்று ஒரு எல்லையோ, இலக்கண முறையோ இல்லை. இலக்கணத்திற்கும் உட்பட்டு மனித வேகத்திற்கும் ஈடு கொடுக்கும் தன்மையில் சிறுகதை அமைந்தது. தொடக்கம் முதல் முடிவு வரையில் ஒரு பொருளையே பற்றி சிறுகதை அமைதல் வேண்டும். எனவே சிறுகதையை பந்தயக்குதிரையோடு ஒப்பிட்டார்கள் பந்தயக் குதிரை தொடக்கம் முதல் இறுதி வரை தொய்வில்லாமல் பாய்ந்து ஓடினால் தான் வெற்றி பெற முடியும். அதுவே பந்தயம் காண்போர்க்கு மகிழ்ச்சியை தரும். அது போன்று சிறுகதையும் தொடக்க முதல் முடிவுரை விறுவிறுப்புடன் அமைதல் வேண்டும். பரமார்த்த குருவையும், அவரது சீடர்களையும் பாத்திரங்கள் ஆக்கி நகைச்சுவையையும், அங்கதமும் கலந்து சுவையான சம்பவங்களுடன் தொகுப்பாக எழுதப்பட்ட வீரமாமுனிவரின் பரமார்த்த குருவின் கதை தமிழில் முதல் புனைகதை இலக்கியமாக எண்ணப்படுகிறது. இது சிறுகதை, நாவல் என இனம் பிரித்து கூற இயலாத ஒன்று

KAMARAJ WOMENS COLLEGE

எனினும் தமிழ் உரைநடையில் கதை இலக்கியம் உருவாக முன்னோடியாக விளங்கியது.

**சிறுகதை**

தமிழில் சிறுகதை வடிவம் எவரால் முதலில் கொண்டுவரப்பட்டது என்பதுகுறித்து விவாதம் உள்ளது. பாரதியாரின் ரயில்வே ஸ்தானம் என்ற சிறுகதையே முக்கியமான முதல் சிறுகதை என்பார்கள்.[1] உண்மையில் பாரதியின் முதல் சிறுகதை 1905ல் தொடங்கி - அவர் ஆசிரியப் பொறுப்பில் இருந்த சக்கரவர்த்தினி என்ற இதழில்- பகுதிகளாக வெளியிடப்பட்ட 'துளஸிபயி என்ற இரஜபுதனக் கன்னிகையின் சரித்திரம்' என்பதாகும். ஆனால் சிறுகதை வடிவம் சரியாக அமைந்தது வ. வே. சு. ஐயர் எழுதிய மங்கையற்கரசியின் காதல் என்ற தொகுதியில் உள்ள குளத்தங்கரை அரசமரம் என்ற சிறுகதை என்பது பலரால் சொல்லப்பட்டுவரும் விவாதத்திற்குரிய கருத்தாகும். சிறுகதை என்ற புதிய இலக்கியவகை தமிழில் அறிமுகமானபோது - சிறுகதை என்பது என்ன?என்ற முடிவான, ஏற்றுக்கொள்ளத்தக்க கருத்து ஏதும் உருப்பெற்று நிலைபெறாத அக்காலகட்டத்தில் (1900-1920), பாரதியார், மாதவையா,வ.வே.சு. ஐயர் ஆகியோர் தத்தமக்கு வாகான வகையாகச் சோதனை முயற்சிகளாக எழுதினர். வ.வே.சு ஐயரே பிற்காலத்தில் நெடிய சரித்திரக் கதைகள் எழுதக் 'கைப்பழக்கமாகவே ' சிறுகதைகள் எழுதி வருவதாகத் தன் நண்பரொருவருக்கு எழுதிய கடிதத்தில் வார்த்தைப்படுத்தியுள்ளார்.

தாம் சுயமாகச் சிறுகதைகள் எழுதும் முன்னரே தாகூரின் வங்கமொழிச் சிறுகதைகளை மூலமொழியறிந்திருந்த பாரதியார் சிறப்பாக மொழிபெயர்த்துள்ளாரென்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் நிலையில் பார்த்தால், பாரதியார் தமது சொந்தச் சிறுகதைகளைத் தாம் விரும்பிய- 'சொல்புதிது, பொருள் புதிது' எனும் முற்போக்கு எண்ணப்படி வார்த்தளித்துள்ளாரென்ற ஏற்பே நியாயமானதாக இருக்கும்.

தற்காலத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றின் மூல மூவர்களான பாரதியார், மாதவையா, வ.வே.சு. ஐயர் ஆகிய மூவருமே 1925வாக்கில் இயற்கையடைந்துவிட்ட பின்னர் ஏற்பட்டிருந்த வெற்றிடக்காலம் நீண்டு தொடர்ந்து விடாமல் தமிழ்ச்சிறுகதையில் மலர்ச்சிக்கு களம் அமைத்தது மணிக்கொடி சிற்றிதழாகும்.

KAMARAJ WOMEN'S COLLEGE

இது டி. எஸ். சொக்கலிங்கம், ஸ்டாலின் சீனிவாசன் ஆகியோரால் நடத்தப்பட்டது. பின்னர் இதை முழுக்கமுழுக்க சிறுகதை இதழாக பி. எஸ். ராமையா வெளியிட்டார். இதில் புதுமைப்பித்தன், கு. ப. ராஜகோபாலன், ந. பிச்சமூர்த்தி, மௌனி போன்றவர்கள் சிறந்த சிறுகதைகளை எழுதினார்கள். இவர்கள் மணிக்கொடி தலைமுறை என்று சொல்லப்படுகிறார்கள்

**தமிழின் சிறந்த சிறுகதைகள்**

1. க. நா. சுப்பிரமணியம் [தெய்வஜனனம்.]
2. சி. சு. செல்லப்பா [சரசாவின் பொம்மை],
3. லா. ச. ராமாமிர்தம் [பாற்கடல்],
4. ஜெயகாந்தன் [நான் என்னசெய்யட்டும் சொல்லுங்கோ],
5. சுந்தர ராமசாமி [வாழ்வும் வசந்தமும்],
6. கு. அழகிரிசாமி [ராஜா வந்திருக்கிறார்],
7. தி. ஜானகிராமன் [பாயசம்],

KAMARAJ WOMENS COLLEGE

# அலகு - 2
# சிற்றிலக்கியமும் – தனிப்பாடலும்

### 1. கலிங்கத்துப் பரணி

வீரர் முகம் மலர்ந்து கிடந்தமை

போர்க்களத்தில் வீரர்கள் முகமலர்ச்சியுடன் இறந்து கிடந்தனர். காரணம் விருந்து உண்ண வந்திருக்கும் விருந்தினரையும், வறியவரையும் முகமலர்ச்சியோடு உபசரிக்கும் இல்லறத்தாற் போல இறந்த பின்பும் தங்களது உடல்களை பருந்துகளும், கழுகுகளும் உண்கின்றன. அதைக் கண்டு தாமரை மலர் போல முகமலர்ச்சியுடன் வீரர்கள் கிடக்கின்றனர். அதைக் கண்டு முகம் மலரும் தமிழரின் பண்பாடு புலப்படுகிறது. சாகின்ற வரைக்கும் பிறருக்கு உதவாதவரை ‘உலோபிகள்’ என்கிறார் ஆசிரியர். சிறிதும் பொருள் தர இயலாத தன்மையாளர்கள் போல போர் புரிந்து தாக்கப்பட்ட வீரர்கள் தம் உயிர் பிரியும் வரை நரிகளுக்கு உடலை கொடுக்க மாட்டார்கள். போரில் காயப்பட்டு கிடந்த வீரர்களின் உடல் துடித்ததை கண்டு நரிகளும் அருகில் செல்ல அஞ்சி நின்றதாம்.

### களத்தில் விழுந்து கிடக்கும் யானை

செல்வ வளம் உள்ள ஒருவரிடம் அன்பு கொண்ட விலை மகளிர் அவரிடம் பொருள் குறைந்தவுடன் விலகிச் செல்வர். பின்னர் வேறு ஒரு செல்வந்தரை நாடிச்செல்வர். அதுபோல போர்க்களத்தில் மதநீர் மிகுந்த யானைகளை வண்டுகள் சூழ்ந்து நின்று யானை இறந்தவுடன் விலகிச் சென்று விடும். அவ்வாறு விலகிய வண்டு வானத்திலிருந்து தேவர்கள் தூவிய மலராகிய மழைத்துளிகளை நாடிச் செல்லும்.

### கொடியோடு விழுந்து கிடக்கும் யானைகளை கூறியது

போர்க்களத்தில் மதம் பொருந்திய யானைகள் எதிரிகளால் தாக்கப்பட்டு சாய்ந்து விழும்போது அரசனுடைய கொடிகளும் சாய்ந்து செந்நிற குருதியின் மீது படிந்து கொள்கின்றன. இக்காட்சி கற்புடைய பெண்கள் தங்களது காதல் கணவரோடு உடன்கட்டை ஏறிய காட்சி போன்று இருந்தது. காட்சியை அனைவரும் காணுங்கள்.

KAMARAJ WOMENS COLLEGE

**கணவரை தேடிய மனைவியார் செயல்**

கணவர் இறந்தது கேட்டு ஓடிவந்த மனைவியர் கணவரோடு சேர்ந்து தாம் போக வேண்டுமென போர்க்களம் சென்று கணவரது உடலைத் தேடினர். உடல் கிடந்த இடம் எங்கே என காளியின் மெய்க்காப்பாளரான சாதகரிடம் கேட்பார். தரையினை தடவிப் பார்ப்பர். என் கணவர் கிடந்த இடம் எங்கே? என்று சுடுகாட்டில் பிணம் தின்கின்ற இடாகிணியிடம் கேட்பதை காண்பீராக.

**2.குற்றாலக் குறவஞ்சி**

**வானரங்கள் கனி கொடுத்து !திரிகூடராசப்பக் கவிராயரின் கற்பனை வளம் !**

குற்றால மலை வளம் பற்றி மலை வாழ் மக்களான குறவர் குலப் பெண்கள் பாடுவது போன்று அமைக்கப் பெற்ற இப்பாடலை இயற்றியவர் திரிகூட இராசப்பக் கவிராயர் என்பார். இசை கூட்டிப் பாடுகையில் பாடலில் பொதிந்துள்ள தமிழ்ச் சுவை நன்கு விளங்கும்)

**பொருள்:**

ஆண்குரங்குகள் பழங்களைப் பறித்துப் பெண் குரங்குகளுக்குக் கொடுத்துக் கொஞ்சுகின்றன. அவற்றுள் சில பழங்களைப் பெண் குரங்குகள் கீழே சிந்துகின்றன. ஆனால், பழங்களைச் சிந்தாமல் அவற்றை எங்களுக்குத் தரக் கூடாதா? என வானுலக மாந்தர்கள் கேட்கின்றனர். அவர்களைப் பார்த்து கானக மக்கள், நீங்கள் விரும்பும் பழங்கள் கனிந்து குலுங்கும் எமது குற்றால மலைக்கு வாருங்கள் என அழைக்கின்றனர். வானத்தில் செல்ல வல்ல சித்தர்கள் குற்றால மலையின் வளங்களைக் கண்டு, அங்கு வந்து தங்கள் சித்து வேலைகளைச் செய்து காண்பித்து கானக மக்களை மகிழ்விக்கின்றனர் !

மலையிலிருந்து கொட்டுகின்ற அருவியின் திவலைகள் எழுந்து வானத்தில் வழிந்து ஓடுகின்றன. இதனால் சூரிய தேவனின் தேரினை இழுத்துச் செல்லும் குதிரைகளுடைய கால்களும் தேர்ச் சக்கரங்களும் வழுக்கிச் சறுக்குகின்றன. இளம்பிறையைத் தன் திருமுடியில் தரித்திருக்கும் சிவபெருமான் கோயில் கொண்டுள்ள இத் திருக்குற்றால மலை இத்தகைய சிறப்புகளை உடையது !

KAMARAJ WOMENS COLLEGE

**3. முக்கூடற் பள்ளு**

மழை அறிகுறிப் பாடல்

(மழை வரும் நேரம், பள்ளர் இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆனந்தமாகப் பாடும் ‘சிந்து’)

**விளக்கம்**

ஆற்றில் நாளை வெள்ளம் வரப்போகிறது, அதற்கான அறிகுறிகள் இப்போதே தெரிகின்றன. மலையாள நாடு (கேரள நாடு) இருக்கின்ற மேற்குத் திசையிலிருந்தும், இலங்கை நாடு (ஈழநாடு) இருக்கின்ற கிழக்குத் திசையிலிருந்தும் மின்னல்கள் சூழ்ந்து மின்னுகின்றன.நேற்றும் இன்றும் காற்று பலமாகச் சுழன்று அடிக்கிறது.

கிணற்றுத் தண்ணீரில் கிடக்கும் சொறித்தவளைச் சத்தமிட்டு மழை வரப்போகும் செய்தியை மக்களுக்குச் சொல்கிறது. மழை வெள்ளம் வந்து நிரம்பினால் சேற்றில் வாழும் நண்டு என்ன ஆகும்? அதற்காக அந்த நண்டு முன்னெச்சரிக்கையாக அந்தச் சேற்றை கொண்டே தன்னுடைய வளையை (வாசலை) அடைக்கிறது.மழையைத் தேடி ஒரு கோடி வானம்பாடி பறவைகள் விண்ணில் மகிழ்ச்சியாகப் பாடித் திறிகின்றன.எல்லோரும் போற்றி வழிபடுகின்ற அழகர் கோயில் திருமாலை பண்ணையில் வேலை செய்து சேரியில் (சேர்ந்து) வாழ்கின்ற பள்ளர்களாகிய நாம் அனைவரும் மழையை வரவேறறு ஆடிப் பாடுவோம், துள்ளி ஆடுவோமே.

**4. அபிராமி அந்தாதி**

**பொருள்:**

என்றும் நீங்காத கல்வி, நீண்ட ஆயுள், கள்ளம் இல்லாத நட்பு, என்றும் குறையாச் செல்வம், எப்போதும் இளமை, பிணி இல்லாத ஆரோக்கியமான உடல், முயற்சிகளைக் கைவிடாத மனோபலம், (சலிப்பு வராத மனம்), அன்பு நீங்காத மனைவி, புத்திர பாக்கியம், குறையாத புகழ், சொன்ன சொல் தவறாமல் இருப்பதற்கான குணம், எந்தத் தடையும் ஏற்படாத கொடை(அளித்தல்), என்றும் குன்றாச் செல்வச் செழிப்பு, துன்பமில்லாத வாழ்வு, உன் பாதத்தின்மேல் பக்தி, இவை அனைத்தையும், பாற்கடலில் உணர்நிலை உறக்கம் கொள்ளும் திருமாலின்

KAMARAJ WOMENS COLLEGE

தங்கையாய் ஆதி கடவூரில் திருக் கோவில் கொண்டு, வாழ்வின் அமுதமாய், தொண்டருக்கெல்லாம் தொண்டராய் விளங்கும் ஈசனின் ஒரு பாதி மேனி கொண்ட அபிராமித் தாயே எமக்கு அருள்வாய்.

**5. திருவரங்க்கலம்பகம்**

**மறம்**

**பாடல் விளக்கம்**

பெண் கேட்டு வந்தார் தூதுவர் ஒருவர் .அவரிடம் பெண்ணின் உறவினர்கள் உனக்கு முன்பே பட்டங்கள் பல பெற்று உயர்ந்த மதிப்புடன் வாழ்கின்ற அரசர்கள் வந்து எங்கள் வீட்டு பெண்ணை திருமணம் செய்து கொள்ள கேட்டனர் .அவர்கள் பெண் கேட்டதால் அடைந்த துன்பங்களை ஊரில் இருப்பவர்களிடம் கேட்டு தெரிந்து கொள். ஏற்கனவே வந்தவர்கள் அவமானப்பட்டு சென்றனர். அவர்கள் கொண்டு வந்த பொருட்களை எல்லாம் நாங்கள் எடுத்துக் கொண்டோம். அவர்களுக்கு பெருமையான அடையாளங்களாக உள்ளவற்றை நாங்கள் இழிவு செய்தோம். பெண் கேட்டு வந்த அரசர்கள் பிடித்து வந்த வெண் கொற்றக் குடைகள் இன்று எங்கள் வீட்டு வாசலை மூடியுள்ளன. அரசர்கள் சூடி இருந்த மகுடங்கள் தினை அரிசியை அளப்பதற்குரிய பணிகளும், மரக்கலங்களும் ஆக பயன்படுகின்றன .எங்கள் ஊரில் உள்ள குடிசைகளுக்கு மேற்கூரையாக அரசர்களுக்கு விசிறியாக பயன்பெற்ற சாமரங்கள் அமைந்துள்ளன. அரசர்கள் தோல்வியடைந்து விட்டுச் சென்ற வில்லும், வாளும், வேலும் வீட்டைச் சுற்றி நாற்புறங்களிலும் வேலியாக போடப்பட்டிருப்பது ஆகும். ஆகவே பெண் கேட்டு வருகின்ற அரசர் ஒருவருக்கும் எங்கள் பெண்ணைத் தர மாட்டோம் என்று சிலர் கூறினர்.

**6. தமிழ் விடுதூது முதல் பத்து கண்ணிகள்**

மதுரைச் சொக்கநாதர் மீது காதல் கொண்ட ஒரு பெண், அவரிடம் தன் காதல் நோயைக் கூறி வருமாறு தமிழ்மொழியைத் தூது விடுக்கின்றாள். அதனால் தமிழைப் போற்றுகின்றாள்.

**பொருள்:**

1. மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் தலைவராக வீற்றிருந்த சிவபெருமான்,

KAMARAJ WOMENS COLLEGE

2. எல்லாத் திசைகளிலும் வெற்றியைத் தரும் தடாதகைப் பிராட்டியாகிய பார்வதி தேவி,

3. விருப்பத்துடன் சிவஞானத் திரட்டைக் கையிலெடுத்த கணபதி,

4. தமிழ்ச்சங்கத்தில் புலவர்களுக்கெதிராக அமர்ந்து பாடல் அறிவித்த முருகப்பெருமான்,

5. மூன்று வயதிலேயே பார்வதிதேவியின் அருளால் பாலருந்தி தமிழ்மொழியும் வடமொழியும் கற்றுத் தேர்ந்த திருஞானசம்பந்தர்,

6. மூன்று வருடங்களுக்கு முன்பு முதலை விழுங்கிய பிள்ளையைச் சிவபெருமானிடம் ஈன்று தரச் சொல்லிப் பாடல் இசைத்த சுந்தரர்,

7. பிரமனும் திருமாலும் தேடியும் அடைய முடியாத சிவனின் திருமுடியையும், திருவடியையும் தேடாமலேயே திருநல்லூரில் தேவாரம் பாடித் தன் தலை மீது முடியாகப் பெற்றுக் கொண்ட திருநாவுக்கரசர்,

8. சிவபெருமானே விரும்பி வந்து தம் ஓலையில் எழுதிக்கொள்ள திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் அருளிய மாணிக்கவாசகர்,

**2. தனிப்பாடல்**

**1. வான் குருவியின் கூடு - ஔவையார்**

**பொருளுரை:**

வான் குருவி எனப்படும் தூக்கணாங் குருவிக்கூடு, அரக்கு எனப் படும் வலிமையான இயற்கைப் பசை, தேன்அடை, சிந்தனைச் சிக்கலை நம்முள் உருவாக்கிவிடும் சிலந்தி வலை இவற்றை மேலோட்டமாகப் பார்த்தால் புல்லிய புலனங்களே! ஆனால் இந்த அறிவியல் உலகில் எந்த மேதையாலும் இவற்றை உருவாக்க இயலுமா?

ஒவ்வொருவரிடமும் ஒரு சிறப்பு இருக்கிறது; சாதாரண பறவையான வான் குருவி கட்டுகின்ற (தூக்கணாங் குருவிக்) கூட்டை இந்தக் கணினி யுகத்தில் வேறு எவராலும் கட்டித் தொங்கவிட்டு அதில் அக் குருவிகளைக் குடி வைக்க முடியுமா? முடியவே முடியாது!

அதாவது இந்த உலகத்தில் ஆற்றிவு படைத்த மனிதர்களாலும் செய்ய முடியாத செயல்களும் இருக்கவே செய்கின்றன என்பதை இடித்துக் காட்டி,

KAMARAJ WOMENS COLLEGE

வாழ்வில் பிற மனிதர்களிடத்தும், பிற உயிர்களிடத்தும் நாம் சமத்துவ உணர்வு கொண்டிருக்க வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுவதே இப்பாடலின் நோக்கம்!

‘யாம் பெரிய வல்லாளன்’ என்பதாய் எண்ணம் கொண்டு பிறரைத் தாழ்மையாக நினைத்து விடக் கூடாது’ என்ற எச்சரிக்கையை இப்பாடல் மூலம் நமக்கு அளிக்கிறார் ஔவையார்!

**2. ஆமணக்குக்கும் – யானைக்கும் - இரட்டுறமொழிதல் - காளமேகப் புலவர்**

**விளக்கம்**

ஆமணக்குச் செடியில் ஆமணக்குக் கொட்டைமுத்து இருக்கும். (ஊன்றுகோல் போன்ற) தன் கொம்பை அசைக்கும்.உள்ளே துளை உள்ள மூரித்தண்டு ஏந்தி வளரும்.கொத்தாக இருக்கும்ஆமணக்குக் குலையை நேரே உயர்த்தித் தலையைச் சாய்க்கும்.

யானை முத்துப்போன்ற தன் வெண்ணிறக் கொம்பை (தந்தத்தை) அசைக்கும்.உள்ளே துளை உள்ள தன் துதிக்கைத் தண்டை ஏந்திக்கொண்டு வரும். கொத்தாகப் பழுத்திருக்கும் வாழைமரத்துக் குலையைச் சாய்க்கும்.

**3. வீரராகவ முதலியார்**

**தனிப்பாடல் பாடல் விளக்கம்:**

பாடிப்பரிசில் பெறுகிறான் பாணன்.அவனுடைய மனைவி பாணி. அவன் கொண்டு வருகின்ற பொருளைப் பார்ப்பதற்காக ஆவலுடன் காத்திருக்கிறாள். வந்ததும் அவனிடம் வள்ளல் என்ன வழங்கினார்? என்று கேட்கிறாள். அதற்கு அவனும் மாதங்கம் வழங்கினார் என்று கூறுகிறான். உடனே அவள் நமது நிலைமையைப் புரிந்து கொண்டு நிறைய தங்கம் வழங்கினாரா வள்ளல் இனி கவலை இல்லை, நன்றாக வாழலாம் என்றாள்.மாதங்கம் என்றதும் நீ தங்கம் என நினைத்தாயோ இல்லை இல்லை அவர் தங்கம் தரவில்லை வேழம் தந்தார் என்றான் .ஐயோ கரும்பு தான் தந்தாரா? நீ பாடிய பாடல் திறமைக்கு தகுதியானது கரும்புதானா? அதை நீயே த தின்றுகொள் என்றாள் பாணி. வேழம் என்றதும் கரும்பு என தவறாக புரிந்து கொண்டாய். அவர் கரும்பு தரவில்லை வள்ளல் தந்தது கம்பம் என்று பாணன் கூறினான் .உன் கவித்திறனுக்கு கம்பின் மாவு தான் கிடைத்ததோ? என்ன செய்ய அதைக் கொண்டு களி செய்து சாப்பிடலாம் என

KAMARAJ WOMENS COLLEGE

ஆறுதல் அடைகிறாள் பாணி. உடனே பாணன் தவறாகவே புரிந்து கொள்கிறாய் அவர் கம்பினுடைய மாவினை தரவில்லை. தந்த பொருள் கைமா என்றான். அதனை உணர்ந்து கொண்ட பாணி அய்யோ யானையா தந்தார். நமக்கே உணவு இல்லை. யானைக்கும் சேர்த்து உணவு கொடுக்க என்ன செய்வது? என கலங்குகின்றாள். சுவையான பாடலாக அமைந்து உரையாடல் அமைப்பில் பாடப்பட்ட பாடல் ஆனது அழகோவியமாக திகழ்கிறது.

**4. சத்தி முத்தப் புலவர்**

**தனிப்பாடல்**

**பொருள் விளக்கம்**

நாரையே நாரையே சிவப்பு நிற கால்களை உடைய நாரையே பனங்கிழங்கினை கூட்டிட்டு பிளந்தது போல இளஞ்சிவப்பு நிறமுடைய கூரான வைகுண்ட நாரையே! நீயும் உன் மனைவியும் தென்திசையில் உள்ள குமரித் துறையில் நீராடி விட்டு வடதிசை நோக்கி செல்கிறீர்கள். அவ்வாறு சென்றால் எங்கள் ஊர் சந்தித்த குளத்தில் தங்குங்கள். நனைந்த சுவருடன் இத்துப்போன கூறையினை உடைய வீட்டில் இருக்கும் பல்லி நான் வரப்போவதை ஒலியெழுப்பி எப்போது அறிவிக்கும் என எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் என் மனைவியிடம் சென்று கூறுங்கள். உன் கணவன் மாறன் வழியாக கூடல் நகரமாகிய மதுரையில் குளிருக்கு போர்த்திக் கொள்ள ஆடை இல்லாமல் கைகளால் உடலை மூடிக் கொண்டு மடக்கிய கால்களால் உடலை தழுவிக் கொண்டு மூங்கில் பெட்டிக்குள் இருக்கும் பாம்பு போல மூச்சுவிட்டுக் கொண்டுள்ளான். அந்த வறியவனை நாங்கள் பார்த்தோம் என்று கூறுங்கள் என்கிறார்.

KAMARAJ WOMENS COLLEGE

# அலகு - 3
# இக்காலஇலக்கியம் – 1

### 1. பாரத சமுதாயம் வாழ்கவே - பாரதியார்

**பாடல் பொருள் விளக்கம்**

பாரத சமுதாயம் வாழ்க! அது வளமுடனும் வெற்றியுடனும் வாழ்க! முப்பது கோடி மக்களின் சங்கமம் இந்த பாரத நாடு முப்பது கோடி மக்களும் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற நிலை இல்லாத பொதுவுடமை சிந்தனையுடன் வாழும் நாடு நம் பாரத நாடு. இது ஈடு இணையற்ற ஒப்பில்லாத சமுதாயம். நம் தேசத்தில் ஒருவன் உணவையோ, உழைப்பையோ, பொருளையோ மற்றவன் அபகரிக்கும் வழக்கம் இனி எந்நாளும் இல்லை. அறிவற்ற மனிதநேயமற்ற அந்த வாழ்க்கை நம் பாரத தேசத்தில் இனி உண்டோ நிச்சயம் இல்லை நம் பாரத நாடு வளமான நாடு. இனிய சோலைகள் சூழ்ந்த நாடு நம் நாடு. இனி புதிதாய் ஒரு விதி செய்வோம். அந்த விதியை நாம் அனைவரும் எந்த நாளும் காப்போம். தனி மனிதன் ஒருவனுக்கு உணவில்லை என்றாலும் இந்த உலகத்தை அழிப்போம். எல்லாரும் எல்லாமும் பெற்று வாழ வேண்டும் என்பதை நமது புதிய கொள்கையாக புதிய விதியாக இருக்க வேண்டும். அத்தகைய புதிய விதியை பின்பற்றும் நமது பாரத நாடு வாழ்வதாக! அமரத்துவமான தெய்வீக நிலையை உலகம் உணரும் படியான முறையை நம் இந்திய தேசம் உலகிற்கு அளிக்கும் இது உண்மை. நம் பாரதமே இந்த உலகிற்கு தெய்வீக பண்பை கற்றுக் கொடுக்கும் பாரத தேசம் வாழ்க! நாம் எல்லோரும் ஒரே குலம், ஒரே இனம் எல்லோரும் இந்தியரே அனைவரும் இங்கு சமம். நாம் ஒருவருக்கொருவர் சரிசமம். எல்லாரும் இந்நாட்டு மன்னர்களே வாழ்க! நம் பாரதம்! பாரத சமுதாயம் வாழ்கவே.

### 2. சிறுத்தையை வெளியில் வா - பாரதிதாசன்

பாரதிதாசன் மக்களை அடிமைப்படுத்திய பகைவரிடமிருந்து விடுபட சீறிவரும் சிறுத்தையாக வேகம் கொண்டு சமூகத்தை நோக்கி வெளிவர வேண்டும். இதுவரை அடைபட்டு கிடந்த இரும்பு கூட்டின் கதவு திறக்கப்பட்டது. உனது வீரத்தை எலியோடு ஒப்பிட்டு இழந்தவர்கள் நடுங்குமாறு புலியின் வேகத்தோடு செயல்பட வெளியில் வரவேண்டும். சிங்கம் போல வீரம் கொண்டு

KAMARAJ WOMEN'S COLLEGE

எதிரியை நோக்கி போராட இளைஞனை உன்னை மாற்றிக் கொள். கண்களைத் திறந்து இந்த உலகத்தைப் பார். உனது நாட்டில் இழிவான கழுதையின் ஆட்சி தேவையா? பகைவர்கள் நம்மிடையே பொய்கள் பல பேசி ஏமாற்றி ஐம்புலன்களையும் அடக்கி செயல்பட விடாமல் தடுத்தனர்.

நம் தாய்மொழியாகிய தமிழுக்கு விளங்கிட்டு வளர விடாமல் தடுத்தனர். நம் நாட்டை கைப்பற்றினர். நமக்குரிய உரிமைகளை அவர்கள் கவர்ந்து கொண்டு அவர்களுக்கு உரியது என்பர். நமக்குரிய உரிமைகளை விட்டு விலகி வாழலாமா? பன்னெடுங்காலமாக இருந்து வந்த உன் வீரம் எங்கே போனது? தாய்ப்மொழி பற்று எங்கே சென்றது? விழிப்படைந்து எழுவாயாக தன்மானத்திற்கு இழுக்கு ஏற்பட்டால் உயிரை மாய்த்துக் கொண்ட மரபு தமிழ் மரபு, வீரம் செழித்த இளைஞர் கூட்டமே எங்கே இருக்கிறீர்கள்? கடல் போல் சூழ்ந்திருக்கும் மாபெரும் பகைமையை எதிர் நோக்கமும் நன்மைகளை வழங்கிடும் தாய்மொழியாகிய தமிழை காத்து எதிரிகளிடமிருந்து விடுதலை பெற்றிடு எழுந்திடுவாயாக. இளைஞனே! பொன் போன்ற சிறப்புடைய தமிழ் மொழியை நீ புதுமைப் படுத்துவாயாக, நம் மக்கள் அனைவரையும் ஒன்று சேர்ப்பாயாக நாம் அனைவரும் ஒன்றுபட்டால் தான் வாழ்க்கை உயரும்.

**3. நாமக்கல் கவிஞர் - பாடல் பொருள் விளக்கம்**

கத்தி இல்லாமல் ரத்தம் இல்லாமல் போர் ஒன்று வருகின்றது. சத்தியம் நிலையானது என்று நம்புகின்றவர்கள் யாவரும் இப்போராட்டத்தில் சேருங்கள். இதுபோன்ற சண்டையை எங்கும் கண்டதில்லை, கேட்டதில்லை முன்பு செய்த புண்ணியம் இப்போது பலித்து விட்டது. அதனால் தான் அகிம்சை வழியில் போராடும் அறப்போராட்டத்தை காணும் பேரு இப்பிறவியில் நமக்கு கிடைத்திருக்கிறது. காந்தி என்ற அமைதி பெருமகன் தேர்ந்தெடுத்துக் காட்டிய செம்மை நெறியை நாம் அனைவரும் பின்பற்ற வேண்டும்.அறநெறி மனித குலத்தின் தீமைகளைப் போக்க வந்த உன்னதமான காந்தி அவர்களின் அன்பு வழி அமைதி போராட்டம் உலகத்திற்கே சிறந்ததொரு வழிகாட்டியாக செம்மை நெறியாக விளங்குகின்றது.

KAMARAJ WOMENS COLLEGE

**4. மீன்கள் - அந்தி நிலா பார்க்கவா?**

தமிழ் மொழி பாடல், பொருள், விளக்கம், வானம், என்ற கடலில் தோன்றிய முத்துக்களோ இந்த விண்மீன்கள். ஏழ்மை நிலையோடு வாழ்கின்ற ஏழையின் குடிசையில் காணப்படுகின்ற துறைகளோ. இவ்வுலகில் எப்போதும் உழைத்துக் கொண்டிருக்கும் உழைப்பாளர்களின் உடம்பில் ஏற்பட்ட தழும்புகளோ, செம்மையான மொழியாகிய தமிழ் பேசுகின்ற நாட்டு மக்களின் கண்கள் எல்லாம் அங்கு சென்று ஒன்றாக துடித்துக் கொண்டிருக்கின்றனவோ, இரவு நேர இருட்டினைப் போல வறுமை வாட்டுவதால் உடுத்திருக்கின்ற ஆடை கூட கந்தலாக காட்சியளிக்கிறது, அக்கந்தல் ஆடையின் இடையிடையே துளைகள் கிடப்பது எண்ணற்ற கண்கள் போல தோன்றுகிறது. கண்கள் அனைத்தும் விண்மீன்களோ, ஒவ்வொரு காலத்தின் நிகழ்வுகளையும் எழுதி வைத்த எழுத்துக்களாக விண்மீன்கள் தெரிகின்றன, நீலக்கண்ணாடியால் கட்டப்பட்ட கோட்டையான வானத்தில் மின்னல்கள் வந்து சென்றதால் ஆங்காங்கே விட்டுச் சென்ற ஒலிக்கீற்றுகளின் அற்புதம் தான் விண்மீன்களோ, பகலில் வெயிலாகிய அரசாங்கம் ஆக்கிரமித்துக் கொள்வதால் விண்மீன்கள் தெரிவதில்லை. இந்திய ஆட்சியில் மக்களின் அடிமை நிலை போலவே விண்மீன்களும் சூரிய ஒளியில் மங்கி விடுகின்றன தொழிலாளர்கள் உழைப்பின் உண்மைக்கு என்றும் சரியான ஊதியம் இல்லை அவர்கள் அடிமை நிலையே வாழ்கின்றனர் அவர்கள் மனக்குமுறல்கள் எண்ணற்றவை அவையே அனைத்து விண்மீன்களாக கவிஞருக்கு காட்சி படுகின்றன.

**5. எட்டாவது சீர் - வணக்கம் வள்ளுவ - ஈரோடு தமிழன்பன்**

வள்ளுவரால் எழுதப்பட்ட திருக்குறள் குறள் வெண்பா அமைப்பினால் ஆனது. எனவே ஏழு சீர்களால் மட்டுமே எழுத முடியும். ஆனால் ஈரோடு தமிழன்பன் எட்டாவது சீரினை வேண்டுகிறார். இக்கவிதை கவிஞரின் கற்பனை திறனை காட்டுகிறது. ஏழு சீர் உள்ள திருக்குறளில் எட்டாவது சீர் இருந்தால் என்னவாக இருந்திருக்கும் என்பதை கவிதையின் கேள்வியாக உள்ளது. எட்டாவது சீர் வந்து நின்று எங்களை ஏன் எழுதவில்லை? என வள்ளுவரிடம் கேள்வி கேட்கிறது கவிதையில் வெளிப்படுத்தப்படாமல் எண்ணங்களில் மட்டும் பதிவாகியுள்ள கருத்துக்கள் அதிகம் உண்டு. அப்போது எட்டாவது சீர் பற்றிய

KAMARAJ WOMENS COLLEGE

தேவையும் தேடலும் உருவாகிறது. வள்ளுவர் தமிழரை தொடர்ந்து சிந்திக்க வைத்துள்ளார் என்பதை இக்கவிதை எடுத்துக்காட்டுகிறது. நூலில் அடங்கியுள்ள 22 கவிதைகளில் இரண்டாவதாக அமைந்துள்ளது எட்டாவது சீராகும். வள்ளுவரின் சிந்தனை ஈரோடு தமிழன்பனால் விரிவு பெற்றுள்ளது. கவிதையால் மட்டுமே சமுதாயத்தை பதிவு செய்ய முடியும் என்பதற்கு சான்றாக இக்கவிதை அமைகிறது.

**சிறுகதைகள்:**

**1. புதுமைப்பித்தன் - கடிதம்**

புதுமைப்பித்தன் அவர்களின் கடிதம் எனும் சிறுகதை ஒரு எழுத்தாளனின் வாழ்க்கையில் பாராட்டு அதாவது மூன்றாவது நபரின் பாராட்டு என்பது மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு படைப்பாளியும் தனக்கான அங்கீகாரத்தை இந்த சமுதாயத்தில் எதிர்பார்ப்பது இயற்கை என்பதை சிறுகதையின் வெளிப்பாடாக ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

**கதைச்சுருக்கம்**

ஒரு ஊரில் சிங்காரம் வேலூர் என்ற எழுத்தாளர் தன் மனதில் பட்ட செய்திகளை கதை வடிவங்களாக படைத்து எழுதிக் கொண்டிருந்தான். அவருடைய நண்பர்கள் சுந்தரம் இன்னும் பலர் இருந்தனர் அவர்கள் மட்டுமே சிங்காரவேலுவின் படைப்புகளை ரசித்துப் படிக்கின்றனர். இந்த சமுதாயத்தின் மீது அவருக்கு சலிப்பு ஏற்படுகின்றது. என்னதான் ஒரு படைப்பாளன் எழுதினாலும் தனக்கான ஒரு பாராட்டு வேண்டும் என்பதை பலகாலம் நொந்து அதை வெளிப்படுத்தக் கூடியவர்களாக இருக்கின்றார். சுந்தரம் நாங்கள் இருக்கின்றோம் என கூறும் போது நீ என்னுடைய சிநேகிதன் என்னுடைய சிநேகத்திற்காக நீ என்னுடைய படைப்புகளை நன்றாக இருக்கின்றது என்று புகழ்கின்றாய். மூன்றாவது ஒரு நபர் படித்து கூறினால் தான் எனக்கு மனதிருப்தி ஏற்படும் என்று அவர் கூறுகின்ற அந்தக் கதை ஐந்து நாட்களாக எழுதிக் கொண்டிருக்கின்றார் ஆனாலும் அக்கதையும் முடிவை அவரால் முடிக்கவில்லை தனக்கென ஒரு பாராட்டு, ஒரு உத்வேகம் இருந்தால் தன்னால் அடுத்தடுத்த முயற்சிகளைச் செய்ய முடியும். இந்த சமுதாயத்தை திருத்தி விட நான் புத்திசாலி

KAMARAJ WOMENS COLLEGE

அல்ல அப்படி என்று பல்வேறு விதங்களை தன்னைத்தானே நொந்து கொள்கின்றார். ஒரு நாள் அவருக்கு ஒரு கடிதம் வருகின்றது. அந்த கடிதத்தை எடுத்து பிரித்துப் பார்க்கின்றான். அது விசாகப்பட்டியிலிருந்து வினோதயன் என்கிற ஒருவர் எழுதிய கடிதம் அது உங்களுடைய சிறுகதைகள் மிகவும் சிறப்பாக இருக்கின்றது. அதை நான் படித்து இன்புற்றேன் என அவருடைய படைப்புகளை பாராட்டி ஒருவர் கடிதம் எழுதியுள்ளார். அந்த கடிதம் அவருக்கு மிகச் சிறந்த உத்வேகத்தை ஏற்படுத்துகின்றது பலமுறை கடிதத்தை தொடர்ந்து வாசித்துக் கொண்டே இருக்கிறார். நன்கு அதை உற்றுப் பார்க்கும்போது சில எழுத்துக்கள் தனக்கு தெரிந்தவரின் எழுத்துக்கள் போலவே இருக்கிறது என்பதை அறிந்தார்.தனக்கு தெரிந்த எவரோ ஒருவர் தான் இக்கடிதத்தை நமக்கு அனுப்பியுள்ளார் என்பதை அறிந்து கொண்டு அக்கடிதத்தை தீயிட்டு கொளுத்தி விடுகிறார் அறை முழுவதும் அந்தப் புகையின் வாசம் நிரம்பி வழிகின்றது இந்த சமுதாயத்தை எத்தனை பேராலும் திருத்த முடியாது என நொந்து கொண்டு புலம்புவதாக இச்சிறுகதை முடிவடைகிறது.

**2. வாய்ச்சொற்கள்- ஜெயகாந்தன்**

**கதைச்சுருக்கம்**

பெற்றோர் இல்லாத கண் பார்வையற்ற ருக்மணி என்ற இளம் பெண்ணுடைய கதை. தாத்தா ஆதரவில் 10 வயது வரை வளர்ந்துவிட்டார். ருக்மணியும் கைத்தொழில் கற்று அதன் மூலம் உயிர் வாழ்ந்து வந்தால் சத்திரமே வீடு, ஆல மர நிழலே கூடை முடையும் கூடாரமாக அமைந்துள்ளது. ருக்மணி இசைமேல் நாட்டம் கொண்டவள். கண்ணில்லா கண்ணப்பன் பாடும் பாடலுக்கு இவள் அடிமை அவன் மேல் இனம் புரியாத காதல் ஏற்பட்டு கனவும், நினைவும் அவனே என்று கருதினாள். கண்ணப்பன் வருகைக்காக ஒவ்வொரு நாளும் காத்திருந்தாள்.ஒரு நாள் அவனும் வருகின்றான் இருவரும் அன்பினை பரிமாறிக் கொள்கின்றனர். கண்ணில்லை என்றாலும் அவர்களுக்குள் உள்ள காதல் உணர்விற்கு பஞ்சமில்லை என்பதை ஆசிரியர் முடிவாக கூறுகின்றார்.

KAMARAJ WOMENS COLLEGE

**ருக்மணி கண்ணப்பனின் உடைய காதல்:**

கண்ணிழந்த நிலையில் வாழ்க்கையில் சந்திக்கும் பல போராட்டங்கள், தங்கள் வயிற்றுப் பசி, வாழ்க்கை துணை இவற்றையெல்லாம் சரிவரி தேடிக்கொள்ள இரு உள்ளமும் துடிப்பதை, துவண்டு போகாத, தொடர்பு இல்லாமல் படைத்துள்ளார் எழுத்தாளர் ஜெயகாந்தன் அவர்கள்

**3. அந்நியர்கள்**

கதையின் கரு உடன் பிறந்தவர்களாக இருந்தாலும் இருவருக்கிடையே பல ஒற்றுமைகளும் பழக்க வழக்கங்களும் ஒன்று போல் இருந்தாலும் நாளடைவில் அவர்கள் அந்நியர்களே என்பதை ஆசிரியர் இச்சிறுகதையின் மூலமாக விளக்குகின்றார்.

கதை சுருக்கம்

சபிதா, சௌமியா இருவரும் சகோதரிகள் சபிதா அக்கா சௌமியா இளைய சகோதரி இருவருக்கும் இடையே மூன்றரை வயது வித்தியாசம் தன்னுடைய உடல் நலத்தை மேம்படுத்துவதற்காக பம்பாயிலிருந்து சௌமியா தன்னுடைய அக்கா வீட்டிற்க்காக சென்னைக்கு வருகிறார். இருவரும் ஒவ்வொரு விஷயத்திலும் ஒன்று போல் பழக்கமுடையவர்கள் காப்பியில் அதிக அளவு இனிப்பு சேர்ப்பது, ஒரே விதமான உணவை உண்பது அகலக்கறை வைத்த புடவை உடுத்துவது என பல விஷயங்களில் இருவருக்கும் ஒற்றுமை காணப்படுகின்றது. ஆனால் சில விஷயங்கள் இருவருக்கும் இடையே வேறுபாடு காணப்படுகின்றது. சவிதாவிற்கு கடவுள் நம்பிக்கை அதிகம் சாமியாவிற்கு அது குறைவு சௌமியா ஒவ்வொரு பொருளையும் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும் என நினைகின்றாள் தன்னுடைய அப்பா அம்மாவின் நினைவாக வீட்டில் அவர்கள் கொடுத்த ஒரு கண்ணாடி ஜாடியை சவிதா பத்திரமாக வைத்திருக்கிறாள். கவனமாக பார்த்துக் கொள்கிறார் தன்னுடைய பிள்ளைகள் அதனை உடைக்கும் என்ற போதும் அவர்களை கண்டித்து பாதுகாக்கிறார். ஆனால் சௌமியாவோ அதை பக்கத்து வீட்டுப் பெண் அழகாக இருக்கிறது என்று கூறியவுடன் அதனை அவள் கல்யாணத்துக்கு பரிசாக வழங்கி விடுகிறார். சபிதா இது நம் அப்பா கொடுத்த பொருள் இதனை நீ கொடுத்து விட்டாயே என்று கேட்பதற்கு அப்பா அம்மாவை பொருட்களின் மூலமாக தான் நினைத்து கொள்ள வேண்டுமா என்று கூறுகிறார்

KAMARAJ WOMENS COLLEGE

ஆகவே அவர்களுக்குள் பல ஒற்றுமைகள் காணப்பட்டாலும் சில இடங்களில் வேற்றுமைகள் காணப்படுகின்றன இரண்டு மாதங்கள் தன்னுடைய அக்கா வீட்டில் தங்கியிருந்து உடல் நலத்தை பேணிக்கொண்டு அன்று ஊருக்கு கிளம்பும் நாளன்று இருவரும் பல விஷயங்களைப் பேசி முடித்து கடைசியாக இருவரும் கையைப் பிடித்துக் கொண்டு செல்கின்றனர் ஆனால் ஒருவருக்கொருவர் பார்க்காமல் செல்கின்றன இதிலிருந்து எவ்வளவு ஒற்றுமையாக இருந்தாலும் அவர்களுக்குள் சில விஷயங்கள் சில செயல்கள் அவர்களை அந்நியர்களாக மாற்றும். காலத்தின் மாற்றத்தினால் வருவது வெறும் நரைமுடி மட்டுமல்ல பல செயல்களில் நமக்குள் வேறுபாடுகள் தோன்றுகின்றன என்பதை ஆசிரியர் சிறுகதை வாயிலாக கூறுகின்றார்.

**உரை நடை**

**1. மு.வ கடிதங்கள்**

**கடிதம் - 1**

மு. வ அவர்கள் தம்பிக்கு என்னும் தலைப்பில் கடித இலக்கியம் படைத்துள்ளார். அதாவது கடிதத்தின் வாயிலாக இன்றைய இளைஞர்களுக்கு எழுச்சியையும், விழிப்புணர்வையும் ஊட்டக்கூடிய வகையில் தம்பிக்கு என்னும் தலைப்பில் கடிதம் எழுதுவதாக படைத்துள்ளார். இதில் எழில் எனும் கதாபாத்திரத்தை படைத்து அந்த எழிலுக்கு கடிதம் எழுதுவது போல் தன்னுடையக் கருத்தை வெளியிட்டுள்ளார். இதில் பல கட்டுரைகள் காணப்படுகின்றன. முதலாவது கடிதத்தில் அவர் கூறியுள்ளது கடிதம் ஒன்று.

**அன்புள்ள எழில்**

அன்புள்ள எழில் என ஆரம்பித்து தன்னுடைய கருத்தைக் கூறத் தொடங்குகின்றார். தமிழ்நாட்டில் வாழும் ஒவ்வொருவரும் வேகம் மட்டுமல்ல விவேகத்தையும் கொண்டு வாழ வேண்டும் அவ்வாறு வாழும் பொழுது பல வெற்றிகளை நாம் காணலாம் என்பதை கூறுகின்றார். "உடலும் வேண்டும், உள்ளமும் வேண்டும் என்று இரண்டையும் உரமாகவும் தூய்மையாகவும் காப்பதே கடமையாகும். மரம் வானளாவ உயரவேண்டியதாக இருக்கலாம்; ஆனால் தான் வேரூன்றிய மண்ணை மறந்து வாழ முடியாதது " நம் பழமையை என்றும்

KAMARAJ WOMENS COLLEGE

மறவாமல் புதுமையைப் போற்றி வாழ வேண்டும் உடல் உள்ளம் இரண்டையும் ஒரு சேத நாம் பராமரிக்கும் பொழுது நம்மால் எதையும் சாதிக்க முடியும்.

**திருவள்ளுவர்**

திருவள்ளுவர் குறித்தும் திருவள்ளுவரின் திருக்குறள் குறித்தும் மூவ அவர்கள் கூறும் போது உலகில் உள்ள மொழிகள் அறம் பொருள் இன்பம் ஏதேனும் ஒன்றை மட்டுமே விரிவாக கூறவும் ஆனால் திருவள்ளுவர் நம் தமிழர்களாகிய நம் தமிழர்களின் வாழ்க்கைக்கு தேவையான அறத்தை விடுத்துப் பொருளும் பொருளை விடுத்து இன்பமும் பெற இயலாது என்பதை அறிந்து அறம் பொருள் இன்பம் எனும் மூன்றையும் தமிழர்கள் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு அமைத்து திருவள்ளுவரை படைத்தார் என்பதை திருவள்ளுவர். அறநெறியும் வேண்டும். பொருள்வளமும் வேண்டும். இன்ப வாழ்வும் வேண்டும் என்று உணர்த்தும் நூல் திருக்குறள் தான். அறத்தை நினைந்து பொருளை மறக்கும்படியாகத் திருவள்ளுவர் கூறவில்லை. பொருளையோ இன்பத்தையோ போற்றி அறத்தை மறக்கும்படியாகவும் அந்தப் பெருந்தகை கூறவில்லை. இன்று விளக்குகின்றார்.

**யாழ்**

தமிழர்களின் பாரம்பரியத்தில் மறக்கப்பட்ட ஒரு இசைக்கருவி யாழாகும். நம் முன்னோர்கள் வழி நாம் பயன்படுத்தியது யாழ் எனும் இசை கருவியாகும் பெரும்பாணாற்றுப்படை சிறுபாணாஆற்றுப்படை என பெயர் வைத்து யாழின் சிறப்பை போற்றி பாதுகாத்தனர்

சிறிய யாழ் பெரிய யாழ் வைத்து பாடிய பாடல்கள் வரலாற்றில் முக்கியமானவை அத்தகைய சிறப்பு மிக்க இசைக்கருவியின் பயனையும் சிறப்பையும் இன்று நாம் மறந்து விட்டோம். இதற்குக் காரணம் நம்முடைய அறியாமை என்கின்றார்களிமண்ணாய்த் திரண்டு கிடக்கிறார்கள்; யார் யாரோ நீர் சேர்த்துப் பிசைந்து தமக்கு வேண்டியவாறெல்லாம் உருவங்களைச் செய்து கொள்கிறார்கள். நாம் களிமண்ணாக இருக்கின்றோம் களிமண்ணை யார் யாரெல்லாமோ பிசைந்து அவர்களுக்குத் தேவையான உருவங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே நம்மை யார் ஆளுகின்றார்கள் ஆள்பவர்கள்

KAMARAJ WOMENS COLLEGE

நம்மை எவ்வாறு வழி நடத்துகிறார்கள் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும் என்று கூறுகின்றார்.

**இன்றைய தமிழகம்**

இன்றைய தமிழகத்தை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு இளைஞனுக்கும் உள்ளது. ஆகவே நம் தமிழகத்தை காக்க வேண்டிய பொறுப்பை நாம் அனைவரும் கையில் எடுக்க வேண்டும் என்பதை கூறி அறிவுரை கூறுகின்றார் தம்பி! "இன்றைய உலகம் வல்லமை மிகுந்த மாமியார்போல் உள்ளது. நம் அருமைத் தமிழகம் மிக நல்ல மருமகளாக உள்ளது. ஆனால் தற்கொலையோ மனவேதனையோ எதிரே வந்து நிற்காதவாறு காப்பாற்றவேண்டிய பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது". அன்புள்ள வளவன் என கடிதத்தை முடிக்கின்றார்.

**கடிதம்** - 2

**வீண் கனவு**

நம் நாட்டில் இன்று தமிழ் மொழி எந்த நிலையில் உள்ளது எவ்வாறு வளர்ச்சி பெறுகின்றது என்பதை ஒவ்வொரு இளைஞனும் உருவாகும் நினைத்துப் பார்க்க வேண்டும் எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று கூறிய நிலை மாறி இங்கு இங்கு எங்கு சென்றாலும் ஆங்கிலத்தின் சிறப்பை காணப்படுகின்றது தமிழ் எங்கும் பரவ வேண்டும் என்று கூறிய கருத்து நிலை மாறி நிலையை அறிய முடிகின்றது நான் மட்டும் சர்வாதியாக இருந்திருந்தால் தமிழில அர்ச்சனையும் தமிழ் வேத திருமுறைகள் திருமுறைகள் இல்லாத திருமணமும் இல்லை என்று கூறியிருப்பேன். ஆனால் இவ்வாறு கூறியது மின் கனவு போல காணப்படுகின்றது ஆக உணர்ச்சி வெள்ளம் மட்டும் இருந்தால் போதாது. அது என்றைக்கேனும் ஒருநாள் வடிந்து வற்றிவிடும், வற்றாத ஊற்று உன் உள்ளத்தில் இருக்கட்டும்; செயல்திறன் வளரட்டும். என்று கூறுகின்றார்.

தமிழரின் குறை தமிழர்களிடம் காணப்படும் மிகப்பெரிய குறை என்ன விலை தமிழர்கள் அடுத்தவர்கள் சொல்லும் அனைத்தையும் நம்பக்கூடியவர்கள் அனைவரும் சமம் என்று யாரேனும் ஒருவர் கூறினார். அதைக் கேட்ட உடனே அதை தன் வாழ்வில் பின்பற்றி நடக்கக்கூடிய தன்மை உடையவர்கள். சொன்னது

KAMARAJ WOMENS COLLEGE

யார் அவர் சொன்னது சரியா என யோசிப்பது இல்லை அவர் யோசிக்கும் பொழுது நம் உள்ளம் தெளிவடைகின்றது அவர் யோசிக்காமல் அவர் கூறும் அனைத்தும் சரி என தமிழனின் மனம் ஏற்றுக் கொண்டு வாழ தொடங்குகின்றது இது தமிழர்கள் மிகப்பெரிய குறையாக காணப்படுகின்றது என்பதை இன்றைக்குச் சாதி முதலான வேறுபாடு வேண்டாம் என்று உபதேசம் செய்தவர், மற்றொரு நாள் மெல்ல வந்து, "மொழி வேறுபாடு வேண்டாம்; தமிழ் என்றும், தமிழ்நாடு என்றும் பேசுகிற குறுகிய நோக்கம் வேண்டாம்" என்று உபதேசம் செய்வார்."

உபதேசம் செய்பவர் யார் அவர் எந்த நிலையில் இருந்து கூறுகிறார் அவ சொல்வது சரியா தவறா என யோசித்து முடிவை எடுக்க வேண்டும் என்று கூறுகின்றார்.

தமிழரின் திருமணங்களில் திருக்குறள் ஓதுவது கனவு அல்ல; தமிழரின் கடமை. கோயில்களில் தேவாரம் முதலியன முழங்குவது கனவு அல்ல. அந்தக் கோயில்களைத் தமிழால் பாடி அவற்றின் பெருமையைக் காத்த சான்றோர்களுக்கு நன்றியுணர்வோடு ஆற்ற வேண்டிய கடமை அது. அதிகாரிகள் தமிழில் எழுத வேண்டியதும் கனவு அல்ல; காந்தியடிகளின் கருத்துப்படி மொழிவாரி மாகாணம் கட்டாயமாக ஏற்படும்போது கவர்னர் தமிழில் கையெழுத்து இடுவதும் கனவு அல்ல.

இன தன் கனவு லட்சியம் ஒவ்வொன்றையும் இளைஞர்களுக்கு கடித இலக்கியம் வாயிலாக விளக்கிக் கூறுகின்றார்.

KAMARAJ WOMENS COLLEGE

# அலகு - 4
# இக்காலஇலக்கியம் – 2

**1. தந்தை பெரியாரின் திருக்குறள் மாநாட்டு:**

15.01.1949 அன்று பெரியார் அவள்களால் திருக்குறள் மாநாடு நடத்தப்பட்டது.இம்மாநாட்டில் பலர் கலந்து கொண்டனர். பல தமிழ் அறிஞர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த மாநாட்டில் அறிஞர் அண்ணா, திருவிக, டி கே சண்முகம், கே அன்பழகன், புலவர் குழந்தை, அய்யாதுரை போன்ற பலப் பெரியவர்கள் தமிழ் அறிஞர்கள் கலந்து கொண்டனர். இறுதியாக அண்ணாவினுடைய 'சந்திரமோகன்' என நாடகம் அரங்கேற்றப்பட்டு, கே அன்பழகன் அவர்கள் நன்றியுரைக் கூற இரண்டு நாட்கள் மாநாடு சிறப்பாக நடைபெற்றது.

**பெரியார் உரை:**

இம்மாநாட்டின் சிறப்பிற்கு காரணம் பெரியார் அவர்கள் நிகழ்த்திய மாபெரும் பேருரை ஆகும். அவ்வுரையில் திருக்குறளும் தனது கருத்தும் என பல செய்திகளை மக்களுக்கு வழங்கினார். அவற்றை காண்போம்.

**திருக்குறளும் பெரியாரும்:**

பெரியார் எந்த ஒரு கருத்தையும் தன் மனம் ஏற்றுக் கொள்ளும் வரை அதனை ஏற்றுக்கொள்ள மாட்டார் தம் மனத்தால் அது உண்மை என அறியும் பொழுது அதனை ஏற்றுக் கொள்வாரே தவிர மற்றவர்களின் தூண்டுதலுக்காக எந்த ஒரு செயலையும் ஏற்றுக்கொள்ள மாட்டார். அதுவரை என்ன நிகழ்ந்தாலும் அதனை பொருட்படுத்தாமல் தன் மனம் ஏற்றுக் கொள்ளும் வரை எந்த ஒரு விஷயத்தையும் ஒப்புக்கொள்ள மாட்டோம் என உறுதியாக இருக்கும் பெரியார் திருக்குறளின் பெருமையை உணர்ந்து அதனை மக்கள் மத்தியில் அதன் சிறப்பை கொண்டு செல்ல இந்த மாநாட்டை நடத்தினார்.

KAMARAJ WOMENS COLLEGE

**குறளும் சுயமரியாதையும்:**

திருக்குறளை திருவள்ளுவர் இயற்றினார் என்பதற்காக அல்லாமல் தன்னுடைய சிந்தனையும் திருக்குறளின் சிந்தனையும் ஒன்று போல் உள்ளது என்பதற்காகவே அவர் தன்னுடைய கையில் திருக்குறளை எடுத்தார் என கூறுகின்றனர். அறிஞர் பெருமக்கள் ஆரியமுறையும், கடவுள் கொள்கையும் நம் நாட்டிலிருந்து நீக்கப்பட்டால் தான் இந்த திருக்குறளின் பெருமையை மக்கள் அனைவரும் இதன் பெருமையை புரிந்து கொள்வர். இதனைக் களைய திருக்குறள் ஒரு மாபெரும் சக்தியாக அமையும் ஆகவே இந்த மாநாட்டை பெரியார் நடத்துவதாக கூறினார்.

**குறளும் மனித வாழ்க்கையும்:**

மக்கள் இடையே ஒழுக்கமும் நாணயமும் ஒழுங்காக இருக்கும் பொழுது தான் நாடு நல்ல முறையில் செயல்பட முடியும். இந்த இரண்டும் கெடும்பொழுது அங்கு மக்கள் வழி தவறி போகின்றனர். ஆகவே தற்போது இந்த இரண்டும் கேட்டுவிட்டது என்று கூறினார். இதற்கு காரணம் மதமும், கடவுளும் என்கிறார். மதமும் கடவுளும் ஒழியும் பொழுது தான் நாட்டில் ஒழுக்கமும் நாணயமும் மக்கள் மத்தியில் சீராக செயல்படும். எடுத்துக்காட்டாக காந்தியடிகள் மிகச்சிறந்த ஞானி எனினும் அவர் அவருடைய கடைசி காலத்தில் அவர் வணங்கிய கடவுளும், அவர் பின்பற்றய சத்தியம், பின்பற்றிய மதம், எதுவும் அவருக்கு உதவவில்லை என்பதை கூறினார்.

**கடவுள் வாழ்த்து**

திருவள்ளுவர் தம்முடைய நூலில் முதலில் உள்ள அதிகாரம் கடவுள் வாழ்த்து கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் எந்த ஒரு உருவம் பொருந்திய கடவுளையும் அவர் குறிப்பிடவில்லை மாறாக எந்தெந்த குணங்களை மனிதர்கள் பெற்றால் வாழ்வில் முன்னேறுவார்கள் என்பதை அறிந்து அந்த குணங்களை வரிசைப்படுத்திக் கூறியிருப்பார்.

KAMARAJ WOMENS COLLEGE

**வான் சிறப்பு**

மக்கள் ஒழுக்கமாய் இருந்தால் இன்றைய அரசியல்வாதிகள் போல் கூறாமல் மழை பெய்தால் மக்களின் கஷ்டம் நீங்கும் என்று அவ்வாறு கஷ்டம் நீரும் பொழுது மக்கள் ஒழுக்கம் உடன் வாழ்வார்கள் என அவர் கூறிய விதம் மக்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் இருப்பதை சுட்டி காட்டினார் பெண்வழி சேரர்

திருவள்ளுவர் பற்றி கூறும் பொழுது ஐந்துபெண்களைப் வகையாக பிரித்துக் கூறுகின்றார் ஒன்று கல்யாணம் ஆகும் முன் தன் தாய் தந்தையருடன் கன்னியராய் வாழும் பெண்கள். இரண்டு திருமணம் முடிந்து கணவனுடன் சேர்ந்து வாழும் பெண்கள். மூன்று விபச்சாரம் செய்யும் விலைமகள் நான்கு திருமணமாகாமல் தான்தோன்றித்தனமாக திரியும் பெண்கள். ஐந்தாவதாக சுந்தரர்கள் என்று அவர் கூறுகிறார் இதன் பொருள் இத்தகைய பெண்களுடன் சேர்ந்து தங்களுடைய வாழ்க்கையை கெடுத்துக் கொள்ளும் ஆண்கள் என குறிப்பிடுகின்றார் ஆகவே திருவள்ளுவர் பெண்களைப் பற்றி எந்த ஒரு இழிவாகவும் கூறாமல் இத்தகைய பெண்களோடு சேரும்பொழுது ஆண்களும் எவ்வாறுட்ட்ட் தங்களுடைய வாழ்க்கையை இழக்கின்றனர் என்பதை அழகாக கூறியுள்ளார் பொதுவுடமை தத்துவம் திருவள்ளுவர் தன்னுடைய நூலில் எங்கும் எந்த சமயமும் மதமோ எந்த ஒரு சார்பும் இன்றி பொதுமையுடன் பொது உடமையுடன் தன்னுடைய கருத்துக்களை பதிவு செய்துள்ளார் ஆகவே திருக்குறளின் சிறப்பை உலகம் முழுவதும் நாம் பரப்ப வேண்டும் அதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு ஊரிலும் இந்த திருக்குறள் மாநாடு நடத்தப்பட வேண்டும் அவ்வாறு நடத்தப்பட்டு மக்களிடையே திருக்குறள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று பெரியார் அவர்கள் கூறி தன்னுடைய உரையை முடித்துக் கொள்கிறார்.

**2. பேரறிஞர் அண்ணா உரை**

அறிஞர் அண்ணா அவர்கள் சின்ன காஞ்சிபுரத்தில் நெசவாளர் குடும்பத்தில் நடராஜன் பங்காரு அம்மாள் தம்பதியருக்கு 1909 செப்டம்பர் 15 மகனாகப் பிறந்தார். பச்சையப்பன் கல்லூரியில் படிப்பை முடித்து பின்னர் முதுகலை பட்டம் பெற்று ஆசிரியராக பணியாற்றினார். பெரியாரின் கொள்கைகளால்

ஈர்க்கப்பட்டு நீதி கட்சியில் சேர்ந்து பத்திரிக்கை துறையிலும், அரசியலிலும் தன்னுடைய பங்களிப்பை வெளிப்படுத்தினார்.

பெரியாரின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு நீதி கட்சியில் சேர்ந்து பின்னர் திராவிடக் கழகத்தின் இணைந்து தமிழகத்தின் மூடநம்பிக்கைகளைக் களைந்து பகுத்தறிவு சிந்தனையைப் பரப்புவதில் ஈடுபட்டார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய மூன்றையும் உயிர்மூச்சாகக் கொண்டார். மதராஸ் மாநிலம் என்ற பெயரை தமிழ்நாடு என்று மாற்றினார்.

**தமிழ் தமிழர் தமிழ் பண்பாடு குறித்த அண்ணாவின் உரை**

1. தமிழ் மொழியின் தொன்மையும், வண்மையும், வளமும் பெற்றது. வலிமையும், பொழிவும் வாய்ந்தது. தானும் வாழ்ந்து பிற மொழிகளையும் வாழ வைப்பது.

2. சிறப்புமிக்க தமிழ் மொழியைப் பிற நாட்டார் வியந்து பேச்சு கின்றனர். நாமும் தமிழ்ப் பண்பாட்டை அறிந்து அதன் ஆற்றலுடன் ஒன்றுபட்டு வாழ வேண்டும்.

3. உலகில் மொழி அறிவு தோன்றாதக் காலத்தில் நமது தமிழ் மொழி இலக்கியம், இலக்கணம் ஆகிய வளங்களைப் பெற்றுத் திகழ்ந்தது.

4. எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்ற உயர்ந்த தத்துவத்தை உலகிற்கு உணர்த்தும் மொழி தமிழ் மொழி.

5. தமிழ் மொழி பற்றி நடக்கும் ஆராய்ச்சிகளையும், முடிவுகளையும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது அண்ணாவின் கருத்து ஆகும்.

6. தமிழர்கள் தமக்கென்று உள்ளதை இழக்க ஒருகாலும் சம்மதிக்க மாட்டார்கள்.

KAMARAJ WOMENS COLLEGE

7. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழரின் பெருந்தன்மை இலக்கியங்கள் வாயிலாக வெளிப்படுகின்றது.

**3. எழுத்துக் குறித்து தொல்காப்பியர் பூங்கா உரையில் கலைஞர் கருணாநிதி அவர்கள் உணர்த்தும் செய்திகள்**

எழுத்ததிகாரத்தின் முதல் நூற்பா

**“எழுத்தெனப்படுவ**
**அகரமுதல் னகர விறுவாய்**
**முப்பது தென்ப**
**சார்ந்து வரன் மரபின் மூன்றலங் கடையே”**

என்பது எழுத்து அதிகாரத்தின் முதல் உப்பாகும் உயிரும் மெய்யமான முதல் எழுத்துக்கள் 30 ஆகும் இவற்றை சார்ந்தவரும் எழுத்துக்கள், சார்பு எழுத்துக்கள் என்பது இந்நூற்பாவின் விளக்கம். ஊறிய நெல்லுக்குள் இருந்து அரிசி தலை காட்டுவது போல வெள்ளை விழிகள் இமைகளில் இடுக்குகளில் இருந்து ஒளி காட்டிய வண்ணம் இருந்தன என்று உவமைக்கிறார்.

ஏட்டில் பதிந்து உழவு செய்வதற்கு முன்பு இதயத்தில் ஆழ உழுதிடும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது என்ற தொல்காப்பியரின் ஆழ்ந்த சிந்தனை உறக்கத்தை உவமிக்கின்றார்.

எழுத்துக்களைப் பத்திரமாக்குதல் எழுத்துக் குறித்து எழுத நினைக்கும் போதே முதல் மொழி எழுத்துக்கள் ஒலி எழுப்பியவாறு அணிவகுத்து, பின்னால் சார்பெழுத்துக்கள் நிழல் போல வருவதை விளக்குகின்றார். தன்னை இகரரம் என்று உகரம் என்று அறிமுகப்படுத்திக் கொள்கின்றன. ஆய்த எழுத்தும் ஆயுதமேந்தி வந்து மிரட்டியது இவ்வாறு எழுத்துக்கள் தொல்காப்பியரிடம் உரையாடின என்று கலைஞர் கற்பனையாக எழுதியுள்ளார் இது படிக்கும் வாசகர்கள் மத்தியில் கற்பனையைத் தூண்டி மனதில் திரைப்படம் போல செய்திகள் எழுத்து நிற்க வழி வகுக்கிறது.

KAMARAJ WOMENS COLLEGE

**நாடகம் / திரைத்தமிழ்**

**1. வேலைக்காரி**

**கதாபாத்திரங்கள்:**

1. வேதாசல முதலியார் – வட்டியூர் ஜமீன்தார்
2. சரசா – வேதாசல முதலியாரின் மகள்
3. மூர்த்தி – வேதாசல முதலியாரின் மகன்
4. அமிர்தம் – வேலைக்காரி
5. சொக்கன் – வேலைக்காரன்
6. முருகேசன் – அமிர்தத்தின் தந்தை
7. சுந்தரம்பிள்ளை – அவ்வூரில் வாழ்பவர்
8. ஆனந்தன் – சுந்தரம்பிள்ளையின் மகன்
9. மணி – ஆனந்தனின் நண்பன்
10. முத்தாயி – அமிர்தத்தின் அம்மா
11. பாக்கியம் – 55 வயது மாப்பிள்ளையின் தங்கச்சி

**கதைச்சுருக்கம்:**

வேதாசல முதலியார் வீட்டுக்கு சொக்கன் துணி பார்சல் கொண்டு வருகிறான். அதென்னது என வே கேட்க சரசம்மா மாதர் சங்கத்துல டான்ஸ் ஆட கேட்ருந்த துணி என சொல்கிறான் சொக்கன். அமிர்தத்திடம் சரசாவை அழைத்துவர சொல்கிறார் வேதாசலம்.

அமிர்தம் ஒடிவந்து சரசாவிடம் சொல்ல என்னடி ஓட்டமும் ஆட்டமும் என எரிந்து விழுகிறாள் சரசா. ஏன் எரிஞ்சு விழுற என மூர்த்தி கேள்வி கேட்க சரசா மூர்த்தியை பழித்து பேசிவிட்டு அப்பாவிடம் செல்கிறாள். அப்பா துணிக்கு காசு சங்கத்திலே வாங்கி தந்திடுமா என சொல்ல சரசா சரிப்பா என்கிறாள். சுந்தரம்பிள்ளை வாங்கிய கடன் என்ன ஆச்சு என சொக்கனிடம் வேதா கேட்க சொக்கன் அவனை அரஸ்ட் பண்ணிடலாம் என ஐடியா கொடுக்கிறான். வேதாசலம் சுபிள்ளையை அரஸ்ட் பண்ணிடுவேன் என மிரட்டி செல்லஸ கையில் காசில்லாத சுபி தற்கொலை செய்துகொள்கிறார். சுபியின் மகன் ஆனந்தன் கையில் 2000ம் பணத்துடன் வெளியூர் வேலையிலிருந்து வருகிறான். வரும் வழியில் நண்பன் மணியை சந்தித்து பேசிக்கொண்டே வருகிறான். மணி கேடி ஆன கதையை ஆனந்தனிடம் கூறுகிறான்.

KAMARAJ WOMENS COLLEGE

ஆனந்தன் வீட்டிற்கு வந்து பார்க்க அப்பா சுபி மரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறார். அதை பார்த்து அதிர்ந்த ஆனந்தன் அப்பா எழுதிய லட்டரைப் படித்து வேதாசலம் செய்த கொடுமைகளை சொல்லி ஒரே சொந்தத்தை இழந்துவிட்டேனே என அழுகிறான்.

மாதர் சங்கத்தில் சரசாவின் நடனம் அரங்கேறி முடிக்க அமிர்தத்தை மட்டம் தட்டிய சரசா தான் பெண் விடுதலைக்குப் போராடுவதாகவும் பெண்கள் அனைவரும் சமம் எனவும் பேசுகிறாள். சரசாவின் சேலையை அமிர்தம் மடித்து வைத்து அழகு பார்க்க சரசா அவளை திட்டுகிறாள், செருப்பை துடைத்து வை என வீசுகிறாள்ஸ இதை பார்த்த மூர்த்தி சரசாவை பணத்திமிர் பிடித்தவள் என திட்டுகிறான்.

ஆனந்தன் வேதாவை வெட்டி பழிதீர்க்க முயல மணி அவனைத் தடுத்து கத்தியைத் தீட்டாதே புத்தியைத் தீட்டு, எந்த ஊர் வேதாவை கொண்டாடுகிறதோ அதே ஊர் வேதாவை திட்ட வேண்டும் அழிக்க வேண்டும் அதற்கு யோசி என்கிறான். ஆனந்தன் யோசிக்கிறான்.

வேதாசலம் வீட்டில் முனியான்டி என்பவன் தர வேண்டிய கடன் பற்றி பேசுகிறார்கள். அமிர்தத்தின் தந்தை முருகேசன் அமிர்தம் மாப்பிள்ளைக்கு வயசாயிடுச்சு கட்டிக்க மாட்டேன் என்று சொன்னதை வேதாவிடம் கூறுகிறான். வேதா அமிர்தத்ததை அதட்டி அறிவுரை சொல்கிறான்.

அமிர்தம் சரசாவிடம் தன் கஷ்டத்தை சொல்லி அழ, நீ என்ன பெரிய மகாராணியா கிழவனை கட்டிக்க மாட்டியா தகுதிக்கு தகுந்தாப்ல ஆசைப்படு என்று அதட்டுகிறாள் சரசா. மூர்த்தியோ அமிர்தத்திற்கு ஆதரவாக பேசி கல்யாணத்தை நிறுத்த ஒரு ஐடியா கொடுக்கிறான்.

மாப்பிளை வீடு பெண் பார்க்க வருகிறார்கள். அமிர்தத்தை தனியே அழைத்து மாப் தங்கச்சி தனியாக பேச அமிர்தத்தின் முட்டாங்கண்ணையும் தெத்துப் பல்லையும் பார்த்து பயந்து அமிர்தத்தின் அம்மாவோடு சண்டை போட்டு பெண் வேண்டாமென கிளம்புகிறார்கள். நடந்ததை மூர்த்தியிடம் தெரிவிக்கிறாள் அமிர்தம். மூர்த்திக்கு அமிர்தம் மீது ஒரு கண். உனக்கு இந்த வீட்டில் யார் மேலயாவது ஆசை இருக்கா என கேட்க சரசா வர அமிர்தம் சரசாவிடம் வழக்கம்போல திட்டு வாங்கிக்கொண்டு கிளம்புகிறாள்.

KAMARAJ WOMENS COLLEGE

மணி கடன் கொடுத்தவனிடம் காசு வாங்கவில்லை என காளி கோயிலில் அடித்து சத்தியம் செய்கிறான். ஆனந்தன் அதிர்கிறான். கடன் கொடுத்தவன் ஆனந்தனை மானக்கேடா திட்ட வேலை போக தற்கொலை முயற்சிக்குப் போகிறான் ஆனந்தன். அதைக்கண்டு மணி புத்திமதி சொல்லி வேதாசலத்துக்கு காளியின் அருள் கிடைத்துள்ளது ஜமீனாக வேதாசலம் உயர்ந்துள்ளான் என்றதும் காளி கோவிலுக்குச் செல்கிறான் ஆனந்தன். காளியிடம் நீதி கேட்டு காளியை அசிங்கப்படுத்துகிறான் ஆனந்தன். காளியை அவமானப் படுத்துகிறான், அவனை ஊர் துரத்துகிறதுஸ வழியில் மணி மீது மோத இருவரும் ஒரு இடத்தில் ஒழிய அந்த இடத்தில் ஆனந்தனைப் போன்றவனின் பிணம் கிடக்கிறது, அவனுடைய டைரியைப் படித்துப் பார்த்து பரமானந்தன் தான் இறந்தவனின் பெயர், அவனுக்கு தாய் மட்டுமே தாய்க்கு கண்ணு தெரியாது என்ற தகவல்களை தெரிந்ததும் ஆள்மாறாட்டத்திற்கு ஐடியா கொடுக்கிறான் மணி.

பரமானந்தம் 10 வருடங்களுக்கு முன்பு வீட்டிலிருந்து கிளம்பி லண்டன் பாரீஸ் என சுற்றியவன், அவன் அம்மாவிற்கு கண் ஆப்ரேசன் என தெரிந்ததும் ஊர் திரும்பியுள்ளான், அவனிடம் அதிக வைர நகைகள் உள்ளதை நோட்டமிட்ட யாரோ அவனை போட்டு தள்ளி இருக்கிறார்கள். அதை மணியும் ஆனந்தனும் பயன்படுத்திக் கொண்டு பரமானந்தனின் தாயாரிடம் செல்கிறார்கள்.

பரமானந்தனின் தாயார் அவனை பார்த்து மகிழ்கிறாள். மணியை யார் என்று விசாரித்து பரமானந்தனின் நண்பன் என்றதும் சந்தோசம் என சொல்லி பரமானந்தனுக்கு வேதாசலம் மகள் சரசாவை கட்டி வைக்கலாம் என முடிவெடுத்துள்ளேன் என தாயார் சொல்ல மணி மகிழ்கிறான். தேனீர் விருந்துக்கு வேதாசலத்துக்கும் அவள் மகள் சரசாவுக்கும் அழைப்பு எழுதுகிறான் மணி. ஊரிலயே பணக்கார குடும்பம் பரமானந்தனின் குடும்பம் என்பதால் சம்மதிக்கிறான் வேதாச்சலம்.

தேனீர் விருந்தை ஆனந்தனும் மணியும் எப்படியோ சமாளிக்கிறார்கள். சில நாட்களில் பரமானந்தனுக்கும் சரசாவுக்கும் திருமணம் நடந்து முடிகிறது. வேதாசலத்தை பழிவாங்கும் படலங்களை ( திட்டங்களை ) பரமானந்தனிடம் எடுத்துரைக்கிறான் மணி.

KAMARAJ WOMENS COLLEGE

சரசா அமிர்தத்தின் மூஞ்சியில் எச்சில் ஆப்பிளை தூக்கி வீசுகிறாள். பரமானந்தனின் கார் வருகிறது. திட்டம் போட்டது போலவே சரசாவை கொடுமைபடுத்துகிறான் பரமானந்தன்.

மூர்த்தி அமிர்தாவிடம் தன் காதலை தெரிவிக்கிறான். அடுத்த சில நேரத்தில் அமிர்தாவிடம் தவறாக பேசுகிறான் பரமானந்தன். அந்த இடத்திற்கு வந்த சரசா வழக்கம்போல அமிர்தாவை அதட்டுகிறாள். என்ன நடந்தது என வினவ அமிர்தா நடந்ததை சொல்ல சரசா அதற்கும் அமிர்தாவையே பழி சொல்கிறாள். மூர்த்தி பரமானந்தத்தை எச்சரிக்கிறான். மூர்த்தி அமிர்தா காதல் விவகாரத்தை வேதாவிடம் சொல்ல முற்படுகிறான் பரமு. வேதாவிடம் மூர்த்தியும் அமிர்தாவும் கொஞ்சி கொலாவும் காட்சியை காட்டுகிறான் பரமு. இதனால் பரமு திட்டம் போட்டபடி மூர்த்திக்கும் வேதாவுக்கும் சண்டை வருகிறது. அமிர்தாவை டச்சு கிச்சு பண்ணி இருந்தா சொல்லு காசு கொடுத்து ஊரைவிட்டு தொரத்திடலாம் என சொல்ல வாழ்ந்தா அமிர்தாவோடு தான் வாழ்வேன் என வீட்டைவிட்டு வெளியேறுகிறான் மூர்த்தி.

அமிர்தாவை பார்க்க செல்கிறான் மூர்த்தி. வேதாசலம் திட்டியதால் முருகேசன் அமிர்தாவை வெட்ட கிளம்புகிறான். மூர்த்தி சென்னை கிளம்பி நண்பர்கள் உதவியுடன் அமிர்தாவை திருமணம் செய்துகொள்ள முடிவெடுக்கிறான். அமிர்தா தன் வீட்டிற்குப் போக அங்கு கோபத்தோடு அமர்ந்திருக்கிறார் முருகேசன். நண்பர்கள் சொன்ன ஐடியாபடி இரவோடு இரவாக அமிர்தத்தை சொந்த ஜாதியை சேர்ந்தவனுக்கு கட்டி கொடுக்க முற்படுகிறான் முருகேசன். வீட்டை கொழுத்துக்கிறான். வீட்டிலிருந்த அனைவரும் எரிந்து சாம்பலாகிவிட்டதாக சென்னை நண்பர்களீன் உதவி கிட்டாத மூர்த்தியிடம் சொல்கிறார்கள். பிறகு மூர்த்தி குரு ஹரிஹரிதாஸ் ஆசிரமத்தில் சேர்கிறான்.

பரமு வேதாச்சலத்திடம் சண்டை போட்டுக்கொண்டு மேலும் கடுப்பேற்றிவிட்டு சரசாவை தன்னுடன் அழைத்துச் செல்கிறான். மூர்த்தி இருக்கும் ஆசிரமம் பெண்களுடன் கூத்தாடும் ஆசிரமம் எனத் தெரிந்ததும் ஹரியை கொன்றுவிட்டு ஆசிரமத்தாட்களிடம் சிக்கி கொள்கிறான் மூர்த்தி.

எரியும் வீட்டிலிருந்து தப்பி வந்த அமிர்தம் பழங்கள் உள்ள லாரியில் ஏற லாரிக்காரர் அவளுடைய கதையைக் கேட்டு பரிதாபப்பட்டு பழங்கள் விற்க அனுப்புகிறார்.

KAMARAJ WOMENS COLLEGE

சரசாவை தனது குடிசை வீட்டுக்கு அழைத்துச் சென்று வேலை வாங்கி கொடுமை படுத்துகிறான் ஆனந்தன். தோட்டத்தில் உள்ள காய்கனிகளை பறித்து மார்க்கெட்டில் விற்று வா என சரசாவை அனுப்புகிறான்.

அமிர்தம் பழக்கூடையை எடுத்துக்கொண்டு வீதி வழியே விற்றபடி வருகிறாள். அமிர்தத்தை பாலு முதலியார் தூக்கிச் செல்கிறார். டாக்டரிடம் செல்கிறார்கள். பாலு முதலியார் தன் மகள் சுகிர்தத்தை இழந்த சோகத்தில் பைத்தியமானதால் அவருடைய பைத்தியத்தை அமிர்தத்தை வைத்து சரி செய்கிறார் டாக்டர். அந்த பணக்கார முதலியார் அமிர்தத்தை தன் மகளாகவே வளர்க்கிறார். மணி வேதாவால் ஊரைவிட்டு போன ஒரு பெண் ஹரி ஆசிரமத்தில் சுந்தரகோஷாக இருந்ததை சொல்லஸ பரமு சென்னையில் அமிர்தம் பணக்காரியாக இருந்ததை சொல்கிறான்ஸ மூர்த்தி கைது செய்யப்படுகிறான்ஸ வழக்கு கோர்ட்டிற்கு வருகிறதுஸ

வடநாட்டு வக்கீலாக பரமுவும் அவனின் வேலையாளாக மணியும் மாறுகிறார்கள். சுந்தரகோஷ் பெண் வேடமிட்டு ஹரியுடன் உல்லாசமாக இருந்ததால் தான் இந்தக் கொலை நடந்தது என்று விளக்குகிறார் வடநாட்டு வக்கீல். பல வருடங்களுக்கு முன் ஜெயிலிலிருந்து தப்பிய பண்டாரி பக்கிரி தான் ஹரிஹரதாஸ் என தெரிய வருகிறது. இந்த வழக்கிலிருந்து விடுதலையான மூர்த்தியிடம் வடநாட்டு வக்கீல் பாலுவின் மகளை கல்யாணம் செய்துகொள்ள சொல்கிறார். அடையாளம் மாறிப் போன சுகிர்தமும் மூர்த்தியும் பாலு வீட்டில் சந்தித்துக் கொள்கிறார்கள்.

மூர்த்திக்கும் சுகிர்தத்திற்கும் திருமணம் நடக்கிறது. ஆனந்தன் நடந்த அத்தனை உண்மைகளையும் கூறுகிறான். அனைவருடைய வேடமும் களைகிறது. வேதாசலம் மனம் திருந்துகிறார். ஒன்றே குலம் ஒருவனே தெய்வம் என்கிறார்

**2. ஓரங்கநாடகம்- சாக்ரடீஸ்**

ராஜா ராணி திரைப்படத்தில் கிரேக்க ஞானி சாக்ரடீஸ் ஓரங்க நாடகமாக இடம் பெற்றிருக்கிறது. சாக்ரடீஸாக சிவாஜி கணேசன் நடித்திருப்பார்கள். கிரேக்க வீதியொன்றில் சாக்ரடீஸ் 'உன்னையே நீ அறிவாய்' என்று அறிவுரை ஆற்றுகின்றா அப்போது அனிடெஸ், மெலிடெஸ் இருவரும் சாக்ரடீஸை கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்துகின்றனர். நீதிபதி, சாக்ரடீஸ் விஷம் தின்று உயிவிட



KAMARAJ WOMENS COLLEGE

வேண்டும் என மரண தண்டனை விதிக்கிறாகள். சிறையில் இருக்கும் சாக்ரடீஸ் தம் மனைவியை எண்ணிப் பேசுகிறாகள். கிரிட்டோ என்பவர் சாக்ரடீஸை எண்ணி வருந்துகிகிறார்கள்.காவலன் விஷக்கிண்ணத்துடன் வருகிறான். விஷமருந்தி சாகும்முறை பற்றி காவலன் கூற, சாக்ரடீஸ் கிண்ணத்தை வாங்குகிறார்கள். கிரிட்டோ சிறிது நேரம் கழித்துக்கூட சாக்ரடீஸ் விஷமருந்தலாம் எனக் கூறுகிறார்கள் அது அற்ப ஆசை என்று கூற, சாக்ரடீஸின் உடல் எப்படி அடக்கம் செய்ய வேண்டும் என கிரிட்டோ கேட்க, சாக்ரடீஸ் விளக்கமளிக்கிறார்கள் [4].

ராணி என்ற பெண் கண்ணிழந்த ஞானக்கண்ணுவின் ஒரே மகள். குடும்ப நிலை காரணமாக வேலை தேடுகிறாள். "கீதா நாடகக் கம்பெனி"யில் டிக்கெட் விற்பவளாக வேலை கிடைக்கிறது. நாடகக் கம்பெனி முதலாளி பாபு ஒரு ஸ்திரீ லோலன். அவன் ராணியை தன்வசப்படுத்த திட்டம் போடுகிறான். ஒரு நாள் சில முரடர்கள் ராணியின் ஆபீசுக்குள் நுழைந்து அவளுக்கு மயக்க மருந்து கொடுத்து பணத்தைக் கைப்பற்ற முயற்சி செய்கிறார்கள். அங்கு வந்த பாபு அவளைக் கெடுக்க முயற்சி செய்யவே அவள் பயந்து ஓடிப்போய் ஒரு காருக்குள் பதுங்கிக் கொள்கிறாள்.

ராஜா ஓர் எலெட்ரிக்கம்பெனி சொந்தக்காரன். நாடகக் கலையில் பற்றுள்ளவன். அவன் பாபுவின் நாடகக் கம்பெனி நாடகங்களில் நடித்து வந்தான். ராணி அவனுடைய காரில்தான் ஏறியிருந்தாள். மயக்க மருந்து காரணமாக அவள் உறங்கி விட்டாள். அவள் காரில் இருப்பதை அறியாத ராஜா காரை ஓட்டிச் செல்கிறான். வீட்டுக்கு வந்தபோதுதான் காரில் ஒரு பெண் இருப்பதை அறிகிறான். அவளை வீட்டில் படுக்க வைக்கிறான்.

தினசரிப் பத்திரிகையில் லீலா என்ற பெண் கல்யாண விஷயமாக பெற்றோரிடம் மனத்தாங்கல் கொண்டு வீட்டை விட்டு வெளியேறிவிட்டாள் என்ற செய்தியை ராஜா படிக்கிறான். இந்தப் பெண் தான் லீலா என நினைத்து அந்த முகவரிக்கு அவளை காரில் அழைத்துச் செல்கிறான்.
தான் தான் லீலா என ராணி சொல்லி அந்த வீட்டு வாசலில் காரிலிருந்து இறங்கிக் கொள்கிறாள். ராஜா போனதும் தன் வீட்டுக்குப் போனாள்.

பின்னர் ராணி வேலை தேடி ராஜாவின் எலெக்ட்ரிக் கம்பெனிக்கு வருகிறாள். அங்கு ராஜாவைக் கண்டதும் திடுக்கிடுகிறாள். என்றாலும் தான் லீலா

KAMARAJ WOMENS COLLEGE

தான் என்றும் பொழுது போக்கிற்காக வேலைக்கு வந்ததாகக் கூறுகிறாள். ராஜா அவளுக்கு வேலை கொடுக்கிறான்.

ராஜா ஒவ்வொரு நாளும் பங்களா வாசலில் ராணியை (லீலாவை) இறக்கி விடுவான். பங்களாவின் சொந்தக்காரியான சாந்தம் ராணி ஒவ்வொரு நாளும் தங்கள் வீட்டு வாசலில் வந்து இறங்குவதைக் கவனித்து, தனது கணவன் சமரசத்தைச் சந்தேகிக்கிறாள்.

நாடகத்துறையில் ராஜா புகழ் பெற்று வந்தான். பாபு அவனை தனது நாடகக் கம்பெனியிலிருந்து நீக்கி விடுகிறான். ராஜா சொந்தமாக ஒரு நாடகக் கம்பெனி தொடங்கி சாக்ரடீஸ் நாடகம் நடத்தும்போது பாபுவின் ஏற்பாட்டால் உண்மையான நஞ்சைக் கொடுக்க முற்பட சமரசம் மூலம் உண்மை வெளிப்பட்டு பாபு கைது செய்யப்படுகிறான்.

பின்னர் சாந்தத்துக்கு ஏற்பட்ட சந்தேகம் நீங்கிய விதத்தையும், ராஜாவும் ராணியும் திருமணத்தில் ஒன்று சேர்வதையும் சொல்வதே திரைக்கதை

**3. இதழியல் தமிழ்**

**முரசொலி கடிதம்**

செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள் கலைஞர் மு கருணாநிதி அவர்களால் எழுதப்பட்டது. செம்மொழி வரலாறு செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. ஆசிரியர் அறிமுகம் எழுத்தாலும், பேச்சாலும், முறையாலும், ஆளுமையாலும் தமிழ் மொழியின் தன்னிகரற்ற ஆளுமையை பெற்று திகழ்ந்தவர் கலைஞர் மு கருணாநிதி அவர் நாவல், நாடகம், கவிதை, இதழியல், துறைமொழி கடிதம், சிறுகதை என 128 நூல்களை தமிழுக்கு தந்துள்ளார். நண்பனுக்கு உடன்பிறப்பே எனும் தலைப்பில் மேற்பட்ட கடிதங்களை தீட்டி உள்ளார். செம்மொழி வரலாற்றில் சில சிறப்பிகள் 25 .12 .2009 இல் இருந்து உடன்பிறப்பே எனும் தலைப்பில் தனது கழக உடன்பிறப்புகளுக்கு செம்மொழியின் சிறப்புகளை கடித வடிவில் வெளிப்படுத்தினார்.

கடிதச் செய்திஉற்ற முறையில் நடக்க இருக்கும் உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டிற்கான செயல்பாடுகளை கடிதங்கள் வாயிலாக தனது தொண்டர்களுக்கு வெளிப்படுத்தினார் கொட்டிக் கிடக்கும் கற்களின் குவியல்களாக கடிதங்கள் அமைகின்றன.

KAMARAJ WOMENS COLLEGE

1967 தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தபோது சென்னை இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டை அண்ணா அவர்கள் நடத்தினார்கள் அதனோடு சேர்த்து எட்டு உலகத்தமிழ் மாநாடுகள் நடைபெற்றுள்ளது இக்கடிதத்தில் பதிவு செய்துள்ளார்.

சென்னையின் சிறப்பாகவும் கண்டோர் வியப்புறும் வகையில் மாநாடு நடைபெற்றது. தமிழர்களின் உள்ள உணர்விலும் அறிவு த்திறனிலும் மிகப்பெரிய மாற்றங்கள் நிகழ்ந்தது என்கிறார்.

**மாநாட்டிற்கான திட்டமிடல்**

மாநாட்டை அழகு வாய்ந்ததாகவும், ஆய்வரங்கப் பொருளாலும் கொண்டதாகவும் அடுத்து வரும் தலைமுறையினருக்கு அறிவு ஊட்டுவதாகவும் அமைத்திட வேண்டும் என்பதை கட்டுரையின் வாயிலாக வெளிப்படுத்துகின்றார். பொது அறிஞர்கள் இதுவரை கண்டிராத உணர்ச்சியும், ஊக்கத்தையும் வெள்ளமென பெருக்கி உலகெங்கிலும் உள்ள தமிழர்களுடைய உணர்வைப்பாய்ச்சுவதாக அமைய வேண்டும்.

1. கண்காட்சிகள் கண்கொள்ளா காட்சிகளாக காலமெல்லாம் நிலைத்து நின்று ஒலி உமிழ்வதாக இருக்க வேண்டும் என்றார்.

2. ஊர்வலம் தமிழர் நாகரிகம், பண்பாடு, தொன்மை, மேன்மை, மென்மை ஆகியவற்றை பேசும் சித்திரப்பாவையாக அமைய வேண்டும் என்று விரும்பினார்.

என பல்வேறு செயல்களில் ஈடுபட்டு உலகத் தமிழ் மாநாட்டை செம்மையுடன் நடத்திக் காட்டினார்.

KAMARAJ WOMENS COLLEGE

# அலகு – 5
# மொழி பயிற்சி

**சொல் வேறுபாடு/ பிழை தவிர்த்தல்**

வாசிப்பது - அஃறினை ஆகிய புத்தகத்தை குறிக்கும் - அகிலன் வாசிப்பது கதை புத்தகம்.

வாசிப்பவர் - வாசிக்கக்கூடிய கருத்தாவைக் குறிக்கும் - செய்திகளை வாசிப்பவர் உதயன்.

சுவர் - வீட்டின் சுவர் வலிமை உடையது.

சுவரில் - வீட்டின் சுவரில் பல்லி செல்கின்றது.

கோயில் - இறைவன் குடிகொண்டுள்ள அந்த முழு கோயிலையும் குறிப்பது கோயில் என்னும் சொல்லாகும் - கோயிலில் மகா மண்டபத்தில் நந்தி பூஜை நடைபெற்றது.

கோவில் - கோவிலின் முழு அமைப்பில் இறைவன் இருக்கக் கூடிய கருவறையை குறிப்பது - கோவில் எனும் சொல் ஆகும். - கோவிலில் இறைவனுக்கு தீபாராதனை நடைபெற்றது.

கருப்பு - கருமை நிறத்தைக் குறிக்கின்றது - காக்கையின் நிறம் கருப்பு.

கறுப்பு - கோபத்தின் வெளிப்பாடு- கோபத்தில் முகம் கறுத்தது.

இயக்குநர் - ஒருமையை குறிப்பது - எழிலன் இந்நாடகத்தின் இயக்குநர்

இயக்குனர் - வன்மையை குறிப்பது - நாடகம் இயக்குனர் குழுவால் உருவாக்கப்பட்டது.

சில்லரை - சில+ அரை - இதன் பொருள் நம் கொடுக்கும் பணத்தின் பாதி என பொருள் படுகின்றது ஆகவே இது சரியான வாக்கியம் அன்று.

சில்லறை - சில+ அறை இவ்வாறு பிரிந்து அதை என்பது நாம் கொடுக்கும் பணத்தின் பகுதி என பிரிந்து சில்லறை என்பதற்கான சரியான பொருளைக் கொடுப்பது ஆகும்.

முறித்தல் - உடைத்தல் - மரக்கிளை யை முறித்தான்.

முரித்தல்- உருக்குதல் - தங்கத்தை உருக்கினான்.

அருகில் - பக்கத்தில் எனும் பொருளில் வருகின்றது. - வீட்டின் அருகில் கடை உள்ளது.

KAMARAJ WOMENS COLLEGE

அருகாமையில் - அருகில் என்பதன் எதிர் பதம்.

அக்கறை - பாசம், பரிவு எனும் பொருளில் வரும். - குழந்தை மீது தாய்க்கு மிகுதியான அக்கறை காணப்படும்.

அக்கரை - ஆற்றின் மறுக்கரை அக்கரைக்கு இக்கரை பச்சை.

மங்கலம் நல்ல செய லைக் குறிக்கின்றது மங்கலநாண், மங்கல வாத்தியம், மங்கள வாழ்த்துப் படலம் போன்ற சொற்களைக் காணலாம்.

மங்களம் - மங்கலம் எனும் சொல்லுக்கு மாற்றாக பொது ளகரம் பயன்படுத்தும் இந்த மங்களமும் தற்போது பயன்படுத்தப்படுகின்றது.

KAMARAJ WOMENS COLLEGE